Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



'எரிக் கணேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்.
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்'

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 25 (20.12.2003) சனிக்கிழமை இதழ்:81

# சமாதான பேச்சில் இணக்கப்பாடு ஏற்பட்டவுடன் முஸ்லிம்கள் தனித்தரப்பாக உள்வாங்கப்படுவர்!

## கிழக்கு ஊடகவியலாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பேச்சுவார்த்தைகளில் இணக்கம் ஏற்பட்ட பின்னர் முஸ்லிம் மக்களுடைய பிரதிநிதித்துவத்துக்காக, நாங்கள் தனித்தரப்பாக முஸ்லிம் பிரதிநிதிகளை உள்வாங்குவோம்.

இவ்வாறு தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற கிழக்கிலங்கை தமிழ் - முஸ்லிம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகக் குறிப்பிடப்படவில்லை.

முஸ்லிம் மக்கள் குறித்த தீர்மானங்களை, அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கள் இதில் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் தொடர்பாக, முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளோடு கலந்து பேசி தீர்மானிக்கும் ஒரு தரப்பை வைத்திருக்கின்றோமென அந்த வரைபில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

சிங்களப் பேரினவாதம் எம்மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி - பாரிய சிக்கலை தோற்றுவிக்க முனைந்தவேளையில், மாற்று வழிகள் எதுவுமில்லாத சூழ்நிலையில்தான் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றும் தவிர்க்க முடியாத - துரதிஷ்டவசமான ஒரு முடிவை எடுத்தோம்.

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டதை நாம் உணர்கிறோம்.

ஆனால், இன்று வலுவான சக்தியாக மக்களின் உரிமைகளை நிலை நாட்டுகின்ற பலமான சக்தியாக வளர்ந்துள்ள சூழலில், இந்த நிலையை நாம் மாற்றியமைக்க முடியுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அண்மையில் திருகோணமலையில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் இதனால் எழுந்த நெருக்கடிகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. இந்த மோதல்களில் பேரினவாத சக்திகளின் தலையீடுகள் உள்ளன.

ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகள் திருகோணமலையில் தமது நடவடிக்கைகளை மிக வேகமாக மேற்கொண்டு வருகின்றன. இவர்கள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே விரிசல்களை ஏற்படுத்தி அதனைப் பிரச்சினையாக்க முயல்கிறார்கள்.

இதன்மூலம் யுத்த நிறுத்த உடன்பாட்டை (10 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய யாழ். நிலைவரம் குறித்து


# சுவிஸ் வெளியுறவு அமைச்சு அதிகாரிக்கு ஜெனிவா சந்திப்பில் இளம்பரிதி விபரிப்பு!

(ஜெனிவா)

**ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி - இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து நாட்டின் வெளிவிவகார பணிப்பாளர் மாக்கஸ் ஹெனியரை ஜெனிவாவில் சந்தித்து, யாழ். குடாநாட்டு நிலைவரம் குறித்து தெளிவாக விளக்கிக் கூறினார்.**

கடந்த புதன்கிழமை சுமார் தொண்ணூறு நிமிடங்கள் நடந்த இந்தச் சந்திப்பில், விடுதலைப்புலிகளின் சுவிஸ் அலுவலகத்தைச் சேர்ந்த குலம், புலிகளின் சுவிஸ் நாட்டு அரசியல் பிரிவைச் சேர்ந்த அன்ரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வை ஏற்படுத்துவதற்கு, புலிகளின் தலைவர் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாக இந்தச் சந்திப்பில் தெரிவித்த இளம்பரிதி மேலும் தெரிவிக்கையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 21 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், இலங்கைப்படைகள் ஒப்பந்தப்படி கோவில்கள் பாடசாலைகள் போன்றவற்றில் அமைத்திருக்கும் முகாம்களை முழுமையாக அகற்றவில்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)



ஜெனிவாவில் - சுவிஸ் வெளியுறவு அமைச்சு அதிகாரி மார்க்ஸ் ஹெனியரை புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும், சுவிஸ் அலுவலகத்தைச் சேர்ந்த குலம் ஆகியோர் சந்தித்தபோது எடுத்தபடம்

### ஊடுருவ முற்பட்டதாக இரு தமிழர்கள் கைது!

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து தங்காலைக்குச் சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் வாகனத் தொடரணியில் இருந்த பஸ்ஸில் ஏறிப் பயணஞ்செய்ய முயன்ற இரண்டு தமிழர்களைக் கைதுசெய்த கடற்படையினர், விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருகோணமலையிலிருந்து கொழும்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

### ஹுனுப்பிட்டிய குண்டுவெடிப்பில் ஒருவர் பலி; 9 பேர் காயம்!

வெலிசர - ஹுனுப்பிட்டிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டுடன், ஒன்பதுபேர் காயமடைந்தனர்.

சிங்கள - முஸ்லிம் இனத்தவர்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறினாலேயே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் காயமுற்றோரில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், கடற்படை மாலுமி ஒருவரும் உள்ளடங்குவதாக தெரியவருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடாவிட்டால் இந்தியாவை தமிழ்மக்கள் கைவிடும்நிலை உருவாகும்

## யாழ்ப்பாணத்தில் சந்திரசேகரன் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியா தலையிடாவிட்டால் தமிழ் மக்கள் இந்தியாவை கைவிடவேண்டிவரும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார், சமூகநலத்துறை அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான அமைச்சர் பெ.சந்திரசேகரன்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற, நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயமூர்த்தியின் 70 ஆவது அகவை நிறைவையொட்டி இடம்பெற்ற பாராட்டு விழாவில், பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விரிவுரையாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் (10 ஆம் பக்கம் பார்க்க)

### எழுச்சிப்பேரவை செயலகம் திறந்து வைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் அலுவலகம், நேற்று கோண்டாவில் - இருபாலை வீதியில் திறந்துவைக்கப்பட்டது.

கோண்டாவில் சந்திக்கு அருகில் அமையப்பெற்ற இந்த அலுவலகத்தின் திறப்புவிழாவில், ஈகைச்சுடரினை மாவீரர் சேரனின் தந்தையார் தருமலிங்கம் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நான்கு இந்திய மீனவர்கள் கைது

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக்கொண்டிருந்த நான்கு இந்திய மீனவர்களை அவர்களின் படகுகளுடன் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கடற்படையினரால் நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், இவர்கள் வந்த படகும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

# 16 வயதுச்சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய இளைஞருக்கு இருபது வருட கடூழியச்சிறை!

## யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பதினாறு வயதுச்சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய இளைஞருக்கு, யாழ்.மேல்நீதிமன்றம் நேற்று இருபது வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் - மல்லாகம் பகுதியில் சட்டபூர்வ பாதுகாவலர்களின் பொறுப்பிலிருந்த 16 வயதுச் சிறுமியை கடத்திச் சென்ற குற்றவாளி, சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார்.

சிறுமியைக் கடத்திச் சென்றமை, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள், குறித்த இளைஞர் மீது யாழ்.மேல் நீதிமன்றத்தில் சுமத்தப்பட்டிருந்தது.

ஆனால் குற்றவாளி வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுவிட்ட நிலையில், (10 ஆம் பக்கம் பார்க்க)

மனம் விரும்பும் விலையில் 21 அங்குல T.V

ரூபா 20, 450/- சிங்கரில் மட்டுமே. SINGER

NO.1 Stanley Road, Jaffna

Tel 021-222 5408

# வீரவசனங்களுடனான மேடைப்பேச்சை விட விடுதலை உணர்வுடன்கூடிய செயலேதேவை

## தேசிய எழுச்சிப்பேரவை திறப்புவிழாவில் பாப்பா

(யாழ்ப்பாணம்)

மேடைப்பேச்சுக்களையும், வீர வசனங்களையும் நாம் நம்பவில்லை. விடுதலை உணர்வையும் அதற்கான கடமைகளையும் செயலின் ஊடாக வெளிப்படுத்துபவர்களையுமே, நாம் விரும்புகின்றோம் என விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

நேற்று கோண்டாவில் பகுதியில் யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத் திறபபு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

தமிழ் மக்களின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகவே தமிழீழத் தேசியத்தலைவரால், தமிழீழப்பகுதிகளில் தேசிய எழுச்சிப் பேரவை எனும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகமானது யாழ் மக்களின் ஒட்டு மொத்த தேவைகளையும், விளங்கிக்கொண்டு தமிழ் உணர்வின் பிரதிபலிப்பாக செயற்படவேண்டும்.

ஆழமாக சிந்தித்தே நாம் செயற்படவேண்டியவர்களாக உள்ளோம்.

இலங்கை அரசியலை தீர்மானிக்கும் தகுதிபெற்றவர்களாக ஈழத்தமிழர் மாறிவிட்டார்கள்.

விடுதலைக்காக நாம் அனைவரும் உழைக்கவேண்டும். மேடைகளில் பேசிவிட்டு வீரம் சாதித்ததாக எண்ணக்கூடாது.

இன்று யாழில் இராணுவ நிலைகள் அதிகரித்தனவே தவிர குறைந்தபாடில்லை. இதனைக் கட்டுப்படுத்தும பொறுப்பு மக்களிடமே உள்ளது. ஆனால் அதற்கான சரியான எதிர்ப்பை மக்கள் வெளிக்காட்டவில்லை.

இராணுவத்தின் இருப்பை அனுசரித்து போகும் தன்மையை மக்கள் மாற்றியமைக்க வேண்டும்.

தேசிய எழுச்சிப்பேரவை தமக்குரிய வேலைத்திட்டம் என்ன என்பதைத் தீர்மானித்து செயற் படவேண்டிய கடப்பாடு உண்டு.

ஆத்மீகரீதியிலான விடுதலையை முன்னெடுப்பதில் துணிவுடன் செயற்படவேண்டிய கடப்பாட்டிற்கு தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளோம். இதை உணர்ந்து யாழ் மக்கள் .செயற்படவேண்டும்.

இராணுவத்தை எதிர்த்து தமிழ் உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய நிலைக்கு மக்களை உருவாக்காத அல்லஉ। உருவாக்க முடியாத தமிழ் அமைப்புக்கள் மீது எமக்கு திருப்தியில்லை.

வீதிகளில் நின்று அடாவடித்தனம் செய்கின்றார்கள் இளைஞர்கள் எனக் குற்றம் சாட்டுகின்றோம். ஆனால் அவர்களுக்குள் தேசிய உணர்வு, தேசப்பற்று என்பன ஊறிக் கிடக்கின்றன. அதனைச் சரியாக வழிநடத்தும் பொறுப்பு பொதுஅமைப்புக்களிடம் உள்ளது.

இராணுவ ட்ரக் பொதுமக்களை மோதியபோதெல்லாம் யாரைக் குழுவாகச் சேர்ந்து தீய செயல் புரிவதாகச் சொன்னோமோ அவர்கள் வியட்நாம் நாட்டில் நடைபெற்றது போல் இராணுவத்திற்கெதிராக முன்னின்று எதிர்ப்புக் காட்டினர்.


இராணுவம் வெளியேறு வெளியேறு என்றால் வெளியேற மாட்டார்கள். அதற்கான சரியான வழிகளை மக்கள் கடைப்பிடித்து அழுத்தம் கொடுத்தாலே அவர்கள் வெளியேறுவார்கள் என்றார்.

# நெல்விளைச்சல் வீழ்ச்சி விவசாயிகள் கவலை!

(உடுவில்)

வலிகாமம் பகுதியில் இந்த வருடம் நெல்விளைச்சலில் வீழ்ச்சி ஏற்படும் ஏதுநிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல்விதைப்பு வேளையில் மழை குறைவாகவும், பின்னர் அதிகமாகவும் பெய்துள்ளது. தற்போது நெற்கதிர்கள் வரும் பருவத்தில் மழை பெய்யாததால் நெல்லின் வளர்ச்சித்திறன குறைந்துவிட்டது. பள்ளக்காணிகளில சிறிதளவு நீர் காணப்பட்ட போதும் மேட்டுக்காணிகளில் நீர் வற்றிவிட்டது. இதனால் நெற் பயிர்கள் கதிர்வரும் வேளையில் வாடிவதங்கி காணப்படுகிறன. இன்னும் ஒருகிழமைக்குள் மழைபெய்யாவிடின் பள்ளக்காணிகளிலும் நீரவற்றிவிடும். இதனால நெல்விளைச்சல் குறைவடைய வாய்ப்பிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (101)






நேற்று நடைபெற்ற தேசிய எழுச்சிப்பேரவைத் திறப்பு விழா நிகழ்வில் பேரவையின் பெயர்ப்பலகையை அருட்திரு. கருணாரட்ணம் அடிகளார் திறந்து வைப்பதையும், நிகழ்வில் சூ. சிறில் உரையாற்றுவதனையும் காணலாம்.

## மலசலகூடம் அமைப்பு

(அரியாலை)

கடந்தகால யுத்தம் காரணமாக முற்றாகச் சேதமடைந்த அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் மலசலகூடம் ஜி.ரி.இசற், நிறுவனத்தின் உதவியுடன் அண்மையில் புதிதாகக் கட்டப்பட்டள்ளது. மேற்படி பாடசாலையில் மலசலகூடம் நெடுநாட்களாக இல்லாததால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு ஆளானர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நுண்கலைத்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

கலைப்பீட இராமநாதன் நுண் கலைத்துறை அனைத்து வருட மாணவர்களுக்குமான கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் பகல் 11 மணிக்கு நுண்கலைத் துறையின் நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து வருடமாணவர்களையும் சமூகமளிக்கும்படி மாணவர் பிரதிநிதி எஸ். பழரசாந்தன் அறிவித்துள்ளார்.

## உலர் உணவு விநியோகம் கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்

யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கு டிசம்பர்-2003 உலர் உணவு விநியோகத்திற்கு உரிய வழங்கற் கட்டளைகள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இன்றும், நாளையும் பெற்று எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன் வழங்கலை மேற்கொள்ளுமாறு அரசஅதிபர் வேண்டியுள்ளார்.

சிறுவிளம்பரம்

விற்பனைக்கு

பாவிக்காத புத்தம் புதிய L.G சலவை இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு:- த. நடராஜா. 73/1, கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 2225488.

(556)

நிறஞ்சனாஸ் சங்கானை

ரஜனி, மீனா, ரோஜா நடித்த

வீரா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

JACKIECHAN நடித்த "WHO AM I" (கராட்டிப் படம்) (சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த

எனக்கு 20 உனக்கு 18

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1847)


கையடக்க தொலைபேசி தவறிவிட்டது

19.12.2003 நேற்றையதினம் எனது ALCATEL வகை கையடக்கத் தொலைபேசி யாழ்ப்பாணத்திற்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமது ஈழநாடு பணிமனையில் ஒப்படைத்து உதவவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இ.சரவணன்,
பண்டத்தரிப்பு

(சி-1905)



கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று நடைபெற்ற விபத்தில் சம்பவத்துடன் தொடர்புடைய மினிபஸ் மின்கம்பத்துடன் மோதி நிற்பதையும், பொலிஸார் தடயங்களைப் பார்வையிடுவதையும் காணலாம்.

# கால்நடை பண்ணையாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கால்நடை வைத்தியபணிமனையின் அனுசரணையுடன் சி.ஐ.சி நிறுவனம் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேசங்களில் உள்ள கால்நடை பண்ணையாளருக்கு இலவச பயிற்சி வகுப்பொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளது.

யாழ். புலோலி.மெ.த.பாடசாலையில் பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை கால்நடை வைத்தியர் வசிகரன் தலைமையில் பயற்சி வகுப்பு ஆரம்பமானது. புதியமுறையில் கோழி வளர்ப்பு, கோழிகளுக்கு ஏற்படுகின்ற நோய்த்தாக்கம், அதனைத் தடுக்கும் முறைபற்றி விரிவுரைகள் இடம்பெற்றன.

சி.ஐ.சி நிறுவனத்தின் கால்நடை வைத்தியகலாநிதி சுமித் அத்தப்பத் வைத்திய கலாநிதி வசாரா ஆகியோர் விரிவுரைகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வின் சி.ஐ.சி நிறுவனத்தின் மட்டு அம்பாறை விற்பனை முகாமையாளர் பவுக் யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் சரஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பண்டிகைக்கால சலுகை

ஜனவரி 15 ஆம் திகதி வரை மட்டுமே

சக்தி F.M இல் உங்கள் வாடிக்கையாளருக்கு நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ரூபா 3500.00 மட்டுமே

விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்
சக்தி F.M, சக்தி T.V யின் அங்கீகரிக்கப்பட்ட
யாழ்.முகவர்

ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.இல. - 222 7227
தொ.நகல் - 222 7227
அதிரடி தொ.பே. - 0777032188

சக்தி T.V, சக்தி F.M முகவர்கள்
பிரத்தியேக விளம்பரதாரரும், வீடியோ விளம்பர படப்பிடிப்பாளர்களும்
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

P.T.தேவா
பூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே.0777614354l

(சி-1903)

யாழ்ப்பாணம் மாநகர சபை

வரவு செலவுத்திட்டம் - 2004

2004ம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகரசபையின் வரவு செலவுத்திட்டம் 2003ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு மாநகரசபை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் (அத்தி யாயம் 252, 212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி/1904)

# இலங்கையின் அபிவிருத்திக்காக அமெரிக்கா 2.2 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடம் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்கு - அமெரிக்கா 2.2 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜப்றிலன்ஸ்ரீட் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்க அபிவிருத்திக்கான சர்வதேச உதவி வழங்கும் ஸ்தாபனத்தின், திருகோணமலை கிளை திறந்துவைக்கபபட்டபோது, அவர் இவ்வாறு தெரிவித்தர்.

திருகோணமலை கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையாக திருகோணமலை பிராந்திய அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் - இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்ஜப்றிலன்ஸ்ரீட் திருகோணமலை அலுவலக திட்டப்பணிப்பாளர் பிறாண்பா பற்றி ஆகிய இருவரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கருத்து வழங்குகையில் - திருகோணமலை மாவட்டத்தில் மூன்று இனங்களும் உள்ளன. அதனால், இனங்களுக்கிடையே மோதல் நிலைகள் ஏற்பட சாத்தியங்கள் உள்ளன. திருகோணமலையில் அபிவிருத்தி செயற்பாடுகள் இல்லை. இதனால், சமாதானம் ஏற்படாது அபிவிருத்தியும் சமாதானமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவையாகும்.

அபிவிருத்தி இல்லாத நிலையில் - எந்தவொரு அமைப்போ, வெளிநாட்டு நிறுவனமோ சமாதானத்தினை ஏற்படுத்த முடியாது.

இந்த அமைப்பு திருகோணமலையில் அமைக்கப்படுவதற்கான காரணம் என்ன எனப் பலரும் வினாவுகின்றனர். இதற்கான காரணம் திருகோணமலையில் ஒரு கடற்படை தளம் அமைந்துள்ளது. இதைவிட திருகோணமலை இராணுவரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இதனால், அமெரிக்க நிறுவனம் அமைக்கப்பட்டது.

இங்குள்ள உள்ளூர் மக்களுக்கு இடையில், சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கே இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. இங்குள்ள ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் சேர்ந்து கோரும் செயற்பாடுகளை இந்த நிறுவனம் சிறப்பாகச் செயற்படுத்தும்.

இதன்மூலம், இனங்களுக்கு இடையே சமாதான உணர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏற்கனவே எமது அமைப்பு இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் 23 செயற்திட்டங்களை செய்வதற்கு, 3877 இலட்சம் அமெரிக்கா டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

திருகோணமலை 13 செயற்திட்டங்களுக்கு, 230,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதைவிட, இலங்கையில் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு, 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## மஹிந்த ராஜபக்ஷ இணையத்தளம் ஆரம்பித்துள்ளார்

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கான உத்தியோக பூர்வ இணையத்தளம் - நேற்றுமுன்தினம் விஞ்ஞான புனைகதை எழுத்தாளர் ஆதர்சி கிளார்க்கின் 86 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரே ஆரம்பித்து வைத்தார்.

http:// www.mahindarajapaksa.com என்ற எதிர்க்கட்சித் தலைவரின் இணையத்தளத்தின் ஊடாக அவரின் கருத்துக்கள் மற்றும் கொள்கைகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம்.

இத்தளத்தின் ஊடாக, பொது மக்கள் தமது கேள்விகளைக் கேட்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## தடைப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்தவருட தொடக்கத்தில் ஆரம்பமாகும்

### லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை - அடுத்த வருடத் தொடக்கத்தில் மீள ஆரம்பிக்கப்படும் என -

ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் டெல்கியிலிருந்து சென்னை வந்தவேளை, அங்குவைத்து இதனைத் தெரிவித்த அவர், தொடர்ந்து கூறுகையில்- பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருக்கவேண்டுமென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனவே, அதனை நாம் மீள அரசாங்கத்துக்குக் கொடுக்கமுடியாது. ஆனால், அவ்வாறானதொருநிலை வருவதற்காக நாம் காத்திருக்கிறோம்.

அத்துடன், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படவில்லை, அவர்கள் விடுதலைப் புலிகளாலேயே கைது செய்யப்படுவதாகவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

## நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள்

### சர்வதேச ஆசிரிய நிறுவனம் கோரிக்கை

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு பிரதமரிடமும், ஜனாதிபதியிடமும் - சர்வதேச ஆசிரியர் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மாதம் 1 ஆம் திகதி தொடக்கம், 12 ஆம் திகதிவரை சர்வதேச ஆசிரியர் நிறுவன சர்வதேசக் கல்வி மாநாடு ஒன்றை, தாய்வான் கவுசாம் நகரில் நடாத்தியிருந்தது. இந்த மாநாட்டின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பில் 155 நாடுகளைச் சேர்ந்த 25.5 மில்லியனுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

250 இற்கு மேற்பட்ட ஆசிரியர் சங்கங்களும் இதன்கீழ் செயற்பட்டுவருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை, யுனெஸ்கோ, யுனிசெவ், ஐக்கிய தொழில்ஸ்தாபனம், உலக வங்கி, உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்களுடன், உத்தியோக ரீதியான நிபுணத்துவ ஆலோசனை அந்தஸ்தைப் பெற்ற, சர்வதேச ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் இதுவாகும்.

இநத மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.தண்டாயுதபாணி இலங்கை நிலவரம் தொடர்பாகக் குறிப்பிடுகையில் -

இலங்கையில் மீளவும் போர் ஏற்படாமல் இருக்கவும், நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை ஒன்றினையும் அங்கு சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையில் ஜனாதிபதியும், பிரதமரும் தங்களுக்கிடையேயுள்ள அதிகாரப்போட்டிக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகண்டு, நோர்வேயின் மத்தியஸ்தத்தை மீளவும் பெற்று, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் எனவும்,

இரண்டு தசாப்தப் போரினால் அழிவுண்ட எமது வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பணிகளைச் செய்வதற்கு, விடுதலைப் புலிகளினால் கையளிக்கபபட்ட இடைக்காலத் திட்டவரைபை அவர்களிடம் கையளிக்கவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், படையினரின் வசமிருக்கும் பாடசாலைகளை மீளவும் கல்வித்திணைக்களத்திடம் ஒப்படைத்து, மாணவர் கல்வியை தொடர வாய்ப்பளிக்கவேண்டும் எனவும் குறிப்பிப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையினை சபையோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

## இந்தியாவுடனான ஒப்பந்தம் இறுதிமுடிவை எடுக்க ஜனாதிபதி தயாராம்!

### பொ.ஐ.மு.தெரிவிப்பு

இந்தியாவுடனான பாதுகாப்புத்துறை உடன்படிக்கை தொடர்பாக, இந்திய அதிகாரிகளுடன் ஆராய்ந்து, இறுதிமுடிவு எடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தயாராகிவிட்டதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பான இறுதி முடிவை எடுப்பது குறித்து, ஜனாதிபதி முன்னுரிமை கொடுத்துள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப்போலவே, ஜனாதிபதியும் இந்த விடயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணியின் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவும் அண்மையில் இந்தியாவுடனான ஒப்பந்தம் குறித்துக் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மார்ச் மாதம் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக அவர் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

## இலங்கைப் பெண்ணை வல்லுறவுக்குட்படுத்திய அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி கைது!

(சைப்பிரஸ்)

நாற்பது வயதான இலங்கைப் பெண் ஒருவரை, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் சைப்பிரசில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சைப்பிரசில் உள்ள பிரிட்டிஷ் தளமொன்றில் பணியாற்றும் பொறியிலாளர்களுடன், அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த இந்த உயர் அதிகாரி யும் பணியாற்றியுள்ளார்.

அங்குள்ள இலங்கையைச் சேர்ந்த குடும்பத்துடன் நெருங்கிப் பழகி வந்த அந்த இராணுவ அதிகாரி - கடந்த செவ்வாய்க்கிழமை 40 வயதான இலங்கைப் பெண்ணை பாலியல் வல்லுவுக்கு உட்படுத்திதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து, நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட 50 வயதான அமெரிக்க இராணுவ உயரதிகாரி - நீதிமன்றத்தினால் 3 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டார்.

இலங்கைப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளபோதும்,

குறித்த பெண்ணைப் பரிசோதித்த மருத்துவர் பாலியல் வல்றுறவு இடம் பெற்றதற்கான தடயங்களை அவரது உடலில் காணமுடிந்ததாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலையிலுள்ள யு.எஸ்.எயிட் நிறுவன திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்கத் தூதுவர் ஜப்றிலன்ஸ்ரட் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். (10)

## கச்சதீவுப் பிரச்சனை குறித்து இலங்கை அரசுடன் பேசப்படும்

### யஸ்வந்த் சின்ஹா தெரிவிப்பு

(கொழும்பு)

கச்சதீவுப் பகுதியில் இராமேஸ்வரம் மற்றும் இலங்கை மீனவர்கள் இணக்கமாக மீன்பிடிப்பது தொடர்பாக, இலங்கை அரசுடன் பேச்சு நடந்துவருவதாக - மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஷ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், அடிக்கடி இலங்கை கடற்படை வீரர்களால் பிடித்துச் செல்லப்படுவதும், அங்கு சிறைவைக்கப்படுவதும், படகுகள பறிமுதல் செய்யப்படுவதும், மீன் வலைகள் சேதப்படுத்தப்படுவதும் சமீபகாலமாக தினசரி நடவடிக்கையாக மாறிவிட்டது.

இதனால் இராமேஸ்வரம், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இலங்கைக் கடற்படையினரின் நடவடிக கையை தடுத்துநிறுத்தி, தமிழக மீனவர்கள் பயமின்றியும், நிம்மதி யாகவும் மீன்பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா பலமுறை கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில், தமிழக, புதுவை மீனவர் கூட்டமைப்பின் தலைவர் போஸ் - செய்தியாளரிடம் கூறுகையில், மத்திய வெளியுறவு அமைச்சர் யத்வந்த் சினஹாவிடம் இருந்து கடிதம் அனுப்பப்பட்டுதுள்ளது.

அதில் கச்சதீவில் இலங்கை மீனவர்களுடன் தமிழக மீனவர்களும் இணக்கமாக மீன் பிடிப்பது தொடர்பாக, இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வேதனையில் மூழ்கியுள்ள எங்களுக்கு, இலேசான ஆறுதலைத்தந்துள்ளது.

இருப்பினும், பேச்சோடு நின்றுவிடாமல் எங்களது வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரும்வகையில், நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கவேண்டும் என்று மீனவர்கள் கேட்டுள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### இலவச கணினிப் பயிற்சி

இணுவில் இளைஞர்கழகமும், தமிழ் தகவல்தொடர்பு ஒழுங்கமைப்பும் இணைந்து நடாத்தும் இலவச கணினிப் பயிற்சி திட்டத்தின் புதிய பிரிவுகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பிரிவில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் பங்குகொண்டு பயன்பெறமுடியுமென இளைஞர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

### பாடசாலைக்கு புதிய மாடிக் கட்டடங்கள்

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக்கு - நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் புதிய மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இந்தக் கட்டடத்திற்கான ஆரம்ப பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தப் பாடசாலை - கடந்த 2000 ஆண்டு யுத்தத்தின் போது, கடும் சேதத்திற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. (55)

### நலன்புரிச்சங்க பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் - எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை நலன்புரிச்சங்கத் தலைவர் எம். பாலசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் - இந்த ஆண்டு கணக்கறிக்கைகள், முன்னேற்ற செயற்பாடுகள், உத்தியோகஸ்தர்களின் நலன்புரிச்செயற்பாடுகள் என்பன ஆராயப்படுவதுடன், 2004 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உத்தியோகஸ்தர் தெரிவும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

# குமுதம் செய்த பாவங்களைக் கழுவுவதற்காகவே தீராநதி இலக்கியபத்திரிகை வெளிவந்திருக்கலாம்

## தீராநதி சஞ்சிகையின் ஆசிரியர் தளவாய் சுந்தரம் தெரிவிப்பு



குமுதம் இதழ் செய்த பாவங்களைக் கழுவுவதற்காகவே, இதன் ஒரு வெளியீடாக இலக்கிய பத்திரிகையான தீராநதி உருவாக்கப்பட்டிருக்கலாம் என நான் எண்ணுகின்றேன் என - இந்தியாவிலிருந்து வெளிவரும் குமுதம் இதழின் இலக்கிய பத்திரிகையான - தீராநதியின் ஆசிரியர் தளவாய் சுந்தரம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற குடாநாட்டு இலக்கிய கர்த்தாக்களுடனான சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்.பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகுகளுடன் இணைந்து, யுனஸ்கோ நிறுவனம் நடாத்தும் ஊடகவளத் துறை நிலையமூடாக, குடாநாட்டு பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இந்தியாவிலிருந்து இவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்- இந்தியாவிலுள்ளபோது யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக என்னிடம் வேறுபாடானதொரு கருத்து இருந்தது. ஆனால் இங்கு வந்தபின்பு அது மாற்றம் பெற்றுள்ளது.

இந்தியாவிலுள்ள இளம் பத்திரிகையாளர்களுடன் ஒப்பிடும்போது, யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகையாளர்கள் திறமைமிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்தியாவிலுள்ள சினிமா, திரையுலகம் எனும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே சுழன்றுகொண்டு, அதனை மையமாக வைத்தே தமது துறையையும் கொண்டு செல்கிறார்கள்.

ஆனால், கடந்த நான்கு நாட்களாக யாழ்ப்பாண இளம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பயிற்சியின் போது - அவர்கள் தெளிவான அரசியல் ஞானம் மிக்கவர்களாகவும், நாட்டின் சூழ்நிலையைப் பிரதிபலிக்கக் கூடியவிதத்திலே கருத்து வெளியிடுபவர்களாகவும் உள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது வரவேற்கத்தக்க விடயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது, குடாநாட்டு இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர் களின் கேள்விகளுக்குத் தளவாய் சுந்தரம் பதிலளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### மூன்றாவது அகவையில்



பெயர் : நி.ஆர்த்திகன்
முகவரி : "அகிலம்" கொற்றாவத்தை.

### மூன்றாவது அகவையில்




பெயர் : ம.சாளினி
முகவரி : சிவகுரு வீதி, மதவடி.

### நான்காவது அகவையில்



பெயர் : மு.லக்ஷனா
முகவரி : இருபாலை வீதி, கோப்பாய்.

### ஒன்பதாவது அகவையில்



பெயர் : ஞா.ரசிகரன்
முகவரி : நெடியகாடு, வல்வெட்டித்துறை.

# தென்மராட்சி விவசாயிகளை ஊக்குவிக்க விதைநெல் உரவகை வழங்கப்படுகின்றன

உணவு விவசாய அமையத்தின் ஏற்பாட்டில், தென்மராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு விதைநெல் மற்றும் உரவகை என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி மக்களின் விவசாய நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்குடனும், விவசாயிகளுக்கு உதவும் பொருட்டுமே இந்த இலவச உதவி வழங்கும் நடவடிக்கையை - உணவு விவசாய அமையம் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, இந்த உதவிகள் அரியாலைப் பகுதி விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோல், யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இந்தமாதம் இறுதிக்குள் வழங்கவென மரக்கறி விதைகள் மற்றும் இரண்டாயிரம் மண்வெட்டிகள் என்பனவும் - யாழ்.மாவட்ட கமநல சேவை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவை அந்தந்தப் பகுதிகளில் இயங்கும் கமநலசேவை நிலையங்களினூடாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

தென்மராட்சிப் பகுதியில் அழிவடைந்த தென்னை வளத்தை மீண்டும் அதிகரிக்கும் நோக்குடன், யாழ். மாவட்ட கமநலசேவை திணைக்களத்துடன் இயங்கும் தெங்குப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன், அந்தப் பகுதி மக்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கானதொரு திட்டத்தினடிப்படையிலேயே, வழங்கப்படுவதாக யாழ்.கமநலசேவை திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)

# நேர்முகத்தேர்விற்கு அழைப்பு அனுப்பாமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் பதவிக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைப்பு அனுப்பப்படாமை குறித்து - மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டை கைதடி தெற்கைச்சேர்ந்த ந.குமாரதேவன் என்பவரே செய்துள்ளார்.

தென்மராட்சி, பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதாகவும், அதற்குரிய அனைத்துத் தகுதிகளும் தனக்கு இருந்தமையினால் விண்ணப்பித்ததாகவும், இருந்தபோதும் நேர்முகப்பரீட்சைக்குரிய கடிதம் தனக்கு அனுப்பப்படவில்லை எனவும் இவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக விசாரணை செய்து, உண்மைநிலையை வெளிக்கொணரும்படி இவர் மனித உரிமை ஆணைக்குழுவை கேட்டுக் கொண்டுள்ளார். அண்மைக்காலமாகப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் திணைக்களங்களில் நடைபெறும் பிரச்சினைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ஜி)

# நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகள் நாலரை மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

## பிரதேசசபை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

நாலரை மில்லியன் ரூபா செலவில் - நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட வீதிகள் சில புனரமைக்கப்பட்டு வருவதாக, நல்லூர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மாதத்துடன் இந்த ஆண்டுக்குரிய வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்படவேண்டியிருப்பதால், வீதி புனரமைப்பு வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

கோண்டாவில் குமரகோட்டப் பகுதியிலுள்ள - நெட்டிலிப்பாய் வீதி, கொக்குவில் கிழக்கு கலைவாணி வீதி, திருநெல்வேலி கேணியடி வீதி, கொக்குவில் மேற்கு பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கு பிடாரி கோயில் வீதி என்பவற்றுடன், திருநெல்வேலி பொதுச் சந்தை மண்டபப் புனரமைப்புக்குமாகவே - 45 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி, பிரதேசசபையின் சொந்த நிதியிலிருந்தே பெறப்பட்டு, வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வருடத்தின் ஆரம்பத்தில் - தாரிடப்பட்ட சில ஒழுங்கைகள், வீதிகள் என்பன இரண்டாம் முறையும் தாரிடப்பட்டு, செப்பனிடப்பட்டும் வருகின்றன. (ப)

# அக்ரஹார காப்புறுதித்திட்டத்திற்கு உரித்துடையோர் விண்ணப்பிக்கவும்

அரசாங்க அலுவலர்க்கான அக்ரஹார காப்புறுதித்திட்டத்தின்கீழ், இந்த ஆண்டுக்கான கொடுப்பனவுகளைப் பெற உரித்துடையவர்கள் - தமது உரித்துக்கோரிக்கைகளை 2004.01.31 ஆம் திகதிக்கு முன், உரிய அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, கடித இலக்கம் 4-2003 இன்படி 2004.01.31 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இந்தச்சுற்று நிருபத்தின் பிரதிகள் - சகல பிரதேச செயலகங்களுக்கும், உதவி அரச அதிபர் பணிமனைகளுக்கும், மாவட்டச் செயலக கிளைத் தலைவர்களுக்கும் - தலைமைப்பீட உதவி அரச அதிபர் என்.வேலும்மயிலும் அனுப்பிவைத்துள்ளார். (24)

# அடுத்த வருடத்திற்குரிய சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிப்பு

அரச அலுவலர்களுக்கான அடுத்தவருட சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பன வழங்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் சகல அரச அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன்படி - சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் வருமாறு -

பெப்ரவரி, மார்ச், மே, ஜூன், ஓகஸ்ட், நவம்பர் ஆகிய மாதங்களில் 25 ஆம் திகதியும் ஜனவரி, ஜூலை ஆகிய மாதங்களில் 23 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியும், செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதியும், டிசம்பர் மாதம் 21 ஆம் திகதியும் அரச அலுவலர்களுக்கான சம்பளமும்,

ஜனவரி, ஜூலை ஆகிய மாதங்களில் 8 ஆம் திகதியும், செப்ரெம்பர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் 9 ஆம் திகதியும் - மார்ச், மே ஆகிய மாதங்களில் 11 ஆம் திகதியும் - பெப்ரவரி ஓகஸ்ட் ஆகிய மாதங்களில் 12 ஆம் திகதியும் - ஜூன் மாதம் 10 ஆம் திகதியும் - ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதியும் அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளன. இவர்களோடு அடுத்தவருடத்தில் சம்பள முற்பணம் வழங்கும் திகதிகளும் சுற்றறிக்கைகள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (24)

# தனியார் கல்விநிலைய ஒன்றியத்திற்கு புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது

தென்மராட்சி கோட்ட தனியார் கல்விநிலைய ஒன்றியத்திற்கு - புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில், தென்மராட்சி கோட்ட அரசியற்துறை அலுலகத்தில் நடைபெற்ற தெரிவுக்கூட்டத்தில் - புதிய தலைவராக நா. கமலநாதனும், செயலாளராக சி. கோகுலனும், பொருளாளராக கா. குணசீலனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ச.கலைவாணன் தலைமையில் நடைபெற்ற இந்தத் தெரிவுக்கூட்டத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாத தனியார் கல்விநிலையங்களை இந்தவருடம் இறுதிக்குள் பதிவுசெய்ய வேண்டுமெனவும், முன்னர் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் பதிவுகளை உறுதிப்படுத்தவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், தென்மராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் க. ஆர்வலன் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

# திருநெல்வேலி சந்தைக் கட்டடவேலைகள் அடுத்தவருடம் முற்றாக பூர்த்திசெய்யப்படும்

திருநெல்வேலிச் சந்தையிலுள்ள கட்டிமுடிக்கப்படாத மாடிக்கட்டடம் - அடுத்த ஆண்டில் முற்றாகக் கட்டிமுடிக்கப்படும் என - நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டில் முடிக்கப்பட்டிருக்கவேண்டிய இந்தக் கட்டடவேலைகள் - ஆளணிப் பற்றாக்குறை மற்றும் பணநெருக்கடிகள் காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தது. தற்போது சபையில் போதிய நிதியிருப்பதால், அதனை முழுமையாகக் கட்டிமுடிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# அழகா திறமையா?

அடர்ந்த காடு ஒன்றில் ஆண் மயில் ஒன்று தன் குடும்பத்தோடு வசித்து வந்தது. அதற்கு அடர்த்தியான நீண்ட தோகை இருந்தது. மகிழ்ச்சி வந்துவிட்டால், மயி



லுக்குத் தலைகால் புரியாது, தனது தோகையை விரித்து ஆடும். காட்டிலுள்ள எல்லாம் பறவைகளும், விலங்குகளும் அங்கே வந்து கூடிவிடும். மயிலினுடைய ஒய்யாரமான ஆட்டத்தைப் பார்த்து இரசிக்கும். அந்த மிருகங்களின் புகழுரையைக் கேட்டுக்கேட்டு மயிலுக்குத் தற்பெருமை கூடிவிட்டது.

ஒருநாள் காட்டிலிருந்த தாமரைக்குளம் ஒன்றிற்கு மயில் சென்றது. அந்தக் குளத்தின் கரையில் நின்று ஆட ஆரம்பித்தது. விலங்குகள், பறவைகள் எல்லாம், மயிலின் ஒய்யாரமான ஆட்டத்தைப் பார்க்கக் கூடிவிட்டன. மயில் அசைந்து அசைந்து ஆடியது. எல்லாமிருகங்களும் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன. அந்தநேரத்தில், வெள்ளைக்கொக்கு ஒன்று வந்து, தாமரைக் குளத்தில் இறங்கியது. அது கரையில் நடைபெற்றுக்கொண்டிருந்த மயிலின் ஆட்டத்தைக் கண்டு மயங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், மயிலின் ஆட்டத்தைக் கொக்கு கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன்பாட்டுக்கு ஒரு காலை மடக்கிக்கொண்டு, மற்றொரு காலால் நின்றுகொண்டு, மீனுக்காகக் காத்திருந்தது.

கொக்கின் செய்கை மயிலுக்குக் கோபத்தை ஊட்டியது. 'ஏ கொக்கே, நான் எவ்வளவு அழகாக ஆடுகிறேன். என் ஆட்டத்தைப் பார்க்க இத்தனை மிருகங்களும், பறவைகளும் காத்திருக்கின்றன. உனக்கு மட்டும் என்ன வந்தது' என்று மயில் கோபத்துடன் கேட்டது.

மயில் கோபமாகக் கேட்டதைக்கூட கொக்கு காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன்பாட்டுக்கு நீரைப் பார்த்துக்கொண்டிருந்தது.

மயிலுக்கு எரிச்சல். இப்படி யாருமே அதை அலட்சியப்படுத்தியது கிடையாது.

'ஏ கொக்கே நான் கேட்டது உனக்குக் கேட்கவில்லையா?' என்று கேட்டது.

கொக்கு மிகவும் அலட்சியமாக மயிலைப் பார்த்தது.

'உனக்கு இந்தக் காட்டை விட்டால் வேறு ஒரு இடமும் தெரியாது. காட்டை விட்டு வெளியே போகாதவன் நீ. நான் அப்படி இல்லை. பல நாடுகளைச் சுற்றியவன். உன் அழகினால் உனக்கு ஒரு பயனும் கிடையாது. ஆபத்து வந்தால் உன் அழகு வந்து உதவிபுரியாது. இன்னும் சொல்லப்போனால், ஆபத்தான வேளையில் உன் அழகிய பெரிய தோகையே உன்னைத் தப்பியோட முடியாமல் தடையாக இருக்கும். இப்படி ஆடிப்பழகுவதை விட, வேகமாகப் பறக்கப் பழகிக்கொள். முதலில் தற்பாதுகாப்பு, பிறகுதான் ஆட்டம், பாட்டம், அழகு எல்லாம்' என்றது கொக்கு.

'உனக்கு என்னைப் பார்த்து, என் அழகைப் பார்த்து பொறாமை' என்று சாடியது மயில். கொக்கு ஒன்றும் பேசாது நின்றது.

திடீரென வேட்டை நாய்கள் குரைப்பது கேட்டது. மயிலின் ஆட்டத்தை பார்த்துக் கொண்டிருந்த மிருகங்கள்,

பறவைகள் எல்லாம் கண்மூடித்திறப்பதற்கு முன்னர் ஓடி மறைந்துகொண்டன. மயில் பறக்க முடியாமல் வேடனிடம் அகப்பட்டது.

முதலில் தற்காப்பு, பிறகுதான் - ஆட்டம், பாட்டம், அழகு என்ற உண்மையை அப்போதுதான் மயில் உணரத்தொடங்கியது.

## ஆங்கில பழமொழிகள்

1) The fear of the lord is the beginning of knowledge. - இறைவனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.
2) Careless talk cost lives. - அநாவசியப் பேச்சு உயிர்களை அழிக்கும்.
3) God made the country man made the town . - நாடு தெய்வத்தால் தோன்றியது. நகரம் மனிதர்களால் தோன்றியது.
4) In the fear of the lord is strong confidence. - கடவுளுக்குப் பயப்பிடுபவனுக்குத் திடநம்பிக்கையுண்டு.
5) Make hay while the sun shines. - காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

எஸ். அசோகமாலா
தரம் - 11
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## எழுதியவர் யார்?

கீழ்க்கண்ட பாடல்களை எழுதியவர் யார் என்று கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்.

1. வீறு பெற்று நில்லடா - விதியை மீறிச் செல்லடா.
2. சித்திரமும் கைப்பழக்கம் - செந்தமிழும் நாப்பழக்கம்.
3. ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு உண்மை தெரிநதது சொல்வேன.
4. மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா.

### விடைகள்

1 சுத்தானந்த பாரதியார் 3. பாரதியார்
2. ஔவையார் 4. கவிமணி

## சார்க் மாநாடு நடைபெற்ற இடங்களும், காலங்களும்

1) 7,8.12.1985 - டாக்கா (பங்களாதேஷ்)
2) 16,17.11.1986 - பெங்களூர் (இந்தியா)
3) 2,4.11.1987 - காட்மண்டு ( நேபாளம்)
4) 29,31.12.1988 - இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்)
5) 21,23.11.1990 - மாலே (மாலைதீவு)
6) 21.12.1991 - கொழும்பு (இலங்கை)
7) 10,11.4.1993 - டாக்கா ( பங்களாதேஷ)
8) 2,3.5.1995 - புதுடில்லி (இந்தியா)
9) 12,13.5.1997 - மாலே (மாலைதீவு)
10) 29,31.7.1998 - கொழும்பு (இலங்கை)
11) 2002 இல் - நேபாளம் (காத்மண்டு)

2003 ஆம் ஆண்டு 12 ஆவது சார்க் மாநாடு பாகிஸ்தானில் நடைபெறவிருந்தது. ஆனால், பிற்போடப்பட்டுள்ளது.

ரி.பி.லதா
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## சந்தேகம் - விளக்கம்

ஒரே வயதுடைய இருவர் - ஒரே வியாதிக்காக ஒரு மருத்துவரிடம் செல்லும்போது, இருவருக்கும் மருந்து மாத்திரைகள் வித்தியாசமாகக் கொடுக்கப்படுகின்றதே ஏன்? எதற்கு?

ஒரு மனிதனைப்போல் அப்படியே இன்னும் ஒரு மனிதனும் இருக்கமுடியாது. அதேபோல்தான், ஒருவருக்கு வந்த நோய் அதே கிருமியால் அப்படியே இன்னொருவருக்கும் வரும் என்று சொல்லமுடியாது.

ஒரேநோய் வெவ்வேறு காரணங்களுக்காக வரலாம். ஒரு கிருமியால் ஒருவருக்குக் காய்ச்சல் வந்திருக்கலாம். அதே போல், வேறு ஒரு கிருமியால் மற்றவருக்கும் காய்ச்சல் வந்திருக்கலாம்.

இதனால் தான், மருத்துவர்கள் அவரவர் நோய்க்கு ஏற்றபடி மருந்துகளைத் தருகின்றனர். இதனால்தான் மருத்துவர்களின் ஆலோசனை இன்றி மருந்து சாப்பிடக் கூடாது என்கின்றனர்.

இங்கே மடிக்கவும்



## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# சோமாலியா



தலைநகர் - மொகாடிஷு
அதிபர் - காஸ்ஸான்
மொழி - சோமாமி, அரபி, ஆங்கிலம், இத்தாலியன்.
சமயம் - இஸ்ஸாம்
நாணயம் - சோமாலி, ஷில்லிங்
முக்கிய நகரங்கள் - மொகாடி, சிஷ்மயூ, பார்பரா.

இந்த நாடு - ஆபிரிக்காவின் கிழக்கு விளிம்பில் அமைந்துள்ளது. இத்தாலிய சோமாலியப் பகுதியும், பிரிட்டிஷ் சோமாலியாவும் இணைந்து 1960 ஆம் ஆண்டில் சோமாலியக் குடியரசானது. 1992 ஆம் ஆண்டு மிகப்பெரும் பஞ்சமும், உள்நாட்டுக் குழப்பங்களும் உலகையே அதிரவைத்தன. 1969 முதல் 1991 வரை இராணுவ ஆட்சி இடம்பெற்றது. 1991 இல் யுனைட்டெட் சோமாலியக் காங்கிரஸ் -இராணுவ ஆட்சியை அகற்றியது. எனினும், சோமாலியக் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு - நிலையான அரசு அமைவதைத் தடை செய்தது. 1994 இல் அமைதி ஒப்பந்தம் ஒன்று எழுதப்பட்டது. இருந்தபோதிலும், இந்த நாட்டில் போராட்டம் தொடர்கிறது. இங்கு வாழும் பெரும்பான்மை மக்கள் சன்னி இஸ்ஸாமியர்களாகக் காணப்படுகின்றனர்.

சோமாலியா ஒரு வறுமை நிறைந்த நாடாகக் காணப்படுகிறது.





இந்த நாட்டில் இடைக்கால அரசொன்று 2000 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தலைநகரின் ஒரு பகுதியினை மட்டுமே இவ்வரசால் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடிந்தது. முக்கிய தொழில்கள்:- விவசாயம், கால்நடை வளர்த்தல்.

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் விடை 63 வரவேண்டும். உபயோகிக்கும் எண்கள்- 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

ம.நிரோஜா
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

விடை அடுத்தவாரம்



# சிறுவர் அரங்கம்




அன்புச் சிறுவர்களே!

இந்த ஆண்டில் இறுதி விடுமுறையில் குதூகலித்து மகிழ்ந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அடுத்த வருடம் உங்கள் வகுப்பு ஒன்று கூடுவதுடன், வயதும் ஒன்று கூடுகிறது. கல்வி மீளப்பெறமுடியாத ஒரு அருஞ்சொத்து. எனவே, கிடைக்கின்ற காலங்களில் மாத்திரம் கல்வியைப் பெற்றுக்கொள்ள எத்தனியுங்கள். உங்கள் மகிழ்ச்சி விளையாட்டில் மட்டுமல்ல, கல்வியிலும் தங்கியிருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். வகுப்பில் நீங்கள் முதலாவதாக வந்தால், மகிழ்ச்சியின் உச்சத்திற்கே நீங்கள் செல்வதுண்டல்லவா. சிறுவர்களே படியுங்கள், விளையாடி மகிழுங்கள் அடுத்த வாரம் சந்திப்போம்.


பாசமுடன் -சாரு அக்கா

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

எந்த இணைப்பில் இவர்கள் இருவரும் குதூகலமாகப் பேசுகிறார்கள்



சென்றவார விடை



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- கி.பிரசாந்தன்
கற்கும் பாடசாலை :-
இந்து ஆரம்ப பாடசாலை
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.



முழுப்பெயர் :- ந.கிருநங்கன்
கற்கும் பாடசாலை :-
வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ச.நிகிந்தா
கற்கும் பாடசாலை :-
இந்து ஆரம்ப பாடசாலை
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், கதைப்புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- யோ.மயூரி
கற்கும் பாடசாலை :-
வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், அழகியற்துறை.

முழுப்பெயர் :- ஸ்ரீ.ஸ்ரீடிலக்சன்
கற்கும் பாடசாலை :-
றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், விளையாட்டு, ஆங்கிலம்.

முழுப்பெயர் :- அ.பிரசன்னா
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- தே.நிஷாந்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, வானொலி கேட்டல், கல்வி.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :............................................
கற்கும் பாடசாலை :............................................
கற்கும் தரம் :............................................
வீட்டு முகவரி :............................................
பிறந்த திகதி :............................................
ஆர்வமுள்ள துறைகள் :............................................
:............................................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

## அ, ஆ வை எழுதப்போ

அ,ஆ வை எழுதப்போறேன்
அம்மா, அப்பா வாருங்கள்!
அடுத்த எழுத்தைக் கைப்பிடிச்சு
எனக்கு எழுதித் தாருங்கள் !
உயிரெழுத்துப் பன்னிரெண்டாம்,
மெய்யெழுத்துப் பதினெட்டாம்,
உயிர்மெய்யான எழுத்தெல்லாம்
இரு நூற்றுப்பதினாறாகும் !
அடுப்புத் தலைகள் முன்றேபோல்
ஆய்த எழுத்து ஒன்றேயாம்!
உங்களுக்குத் தெரியுமா?
உரக்கச் சொல்லிக் காட்டுங்கள் !

இங்கே மடிக்கவும்



## ரோஜா



சின்ன வண்ண ரோஜா
சிவந்த நல்ல ரோஜா
என்னைப் பார்த்துச் சிரிக்கும்
எங்கள் வீட்டு ரோஜா

பட்டு வண்ண ரோஜா
பவள நிற ரோஜா
தொட்டுப் பார்க்க - உன்னை
நீண்ட நாளாய் ஆசை.

முள்ளிருக்கும் மரத்தில்
பட்டு இதழ் விரித்த
கள்ளம் இன்றிச் சிரிக்கும்
என்ன விந்தை ரோஜா

பெண்கள் விரும்பும் ரோஜா
மனதை மயக்கும் ரோஜா
உன்னைப் பறித்து நானே
இறைவன் பாதம் சேர்ப்பேன்

ப.கபிலன்
யாழ்.மத்திய கல்லூரி.


## ரை பிறந்த கதை



இங்கிலாந்து மன்னர் ஒருவர் வேட்டையாடச் சென்றார். அப்போது அவரின் கழுத்தில் தவறுதலாகக் காயம் ஏற்பட்டுவிட்டது. மறுநாள், மந்திரி சபையில் முக்கியமாகப் பேசவேண்டியிருந்ததால் - அவர் கழுத்தில் கட்டுப் போட்டுக் கொண்டால் விகாரமாக இருக்கும் என்று நினைத்து - காயம் ஏற்பட்ட இடத்தை மறைக்க, நீண்ட பட்டுத்துணியைக் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு சபைக்குச் சென்றார்.

அதைக் கண்ட மற்றவர்களும் அழகிற்காக, அதுபோல கட்டத்தொடங்கினார்கள். அதுவே பின்னர் 'ரை' (Tye) கட்டும் பழக்கமாக மாறியது.

## மனிதனால் முடியாதது எது



மில்டன் ரைட் - ஒரு பாதிரியார். 1870 ஆம் ஆண்டில், தான் கல்வி கற்பித்த பாடசாலை அதிபருடன் உரையாடும்போது, மனிதன் தனக்குத் தேவையான புதிய புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்து வருகின்றான் என்றார். இதற்கு உடனே தலைமை ஆசிரியர் - இவற்றுடன் மனிதன் நின்றுவிடமாட்டான். பறவைகளைப்போல வானில் பறக்கவும் ஆரம்பித்து விடுவான் என்றார்.

இதனைக் கேட்ட மில்டன் ரைட் -என்ன வானில் பறந்துவிடுவானா? அது ஒரு நாளும் முடியவேமுடியாது. மனிதர்களால் முடியும் என்பது தெய்வத்தின் சக்தியை அவமதிப்பது ஆகும் என்று கோபத்துடன் கூறினார்.

அவர் அன்று (1870 இல்) கூறிய வாக்கை பொய்யாக்கியவர்களோ அவருடைய இரண்டு பிள்ளைகளான வில்பர் ரைட், ஆர்வில் ரைட் ஆகிய இருவரும்தான். எனவே, மனிதன் நினைத்தால் முடியாதது எது. எனவே முயன்று பாருங்கள் எல்லாம் முடியும்.

வில்பர்ரைட், ஆர்வில் ரைட் என்ற இரண்டு சகோதரர்களும் ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்து, பறக்கவிட்ட 100 ஆவது ஆண்டு நிறைவு விழா - கடந்தவாரம் இடம்பெற்றது.

முதலாவது விமானப்பயணம் ஆரம்பித்த இடமான வடகரோலினாவில் அமைந்துள்ள திற்றிக்சோக் என்ற கடற்கரையில் முதலில் உபயோகித்த விமான வடிவமைப்பு போன்ற அமைப்பில் அமைத்து பறக்கவிடப்பட்டது.

இந்த ரைட் சகோதரர்களின் தந்தை

## விடுகதைகளும் விடைகளும்

1. எரிவான் மணப்பான் உற்சாகம் கொடுப்பான். அவன் யார்?
2. குறி தப்பாத முள், அங்கும் இங்கும் ஆடினாலும் ஒன்றுசேரும்போது அளவைக்கணிக்கும். அது என்ன?
3. காட்டுவழி போனேன், காலிலே 'நறுக்' அது என்ன?
4. வளர்ந்தாலும் நான் இன்னும் சிறுபிள்ளை தான். வெட்டினாலும் அதுகூட சிறுதொல்லை தான். அவன் யார்?
5. எண்ண எண்ண வார்த்தைகளோ, எண்ணும் போது காசுகளோ அது என்ன?
6. வானில் உலா வருபவன், இதயம் குளிர வைப்பான். அவன் யார்?

### விடைகள்

1.ஊதுபத்தி. 2.தாராசுமுள். 3.முள். 4.நகம். 5.தந்திக்கட்டணமுறை 6.மேகம்.

## உங்கள் கைவண்ணம்



க.தமயந்தன்
தரம் - 8
பெரியபுலம் மகா வித்தியாலயம்.



கு.மணிமாறன்
தரம் -10
ஹாட்லிக் கல்லூரி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### கதிர்காமர் ஒரு ஆபத்தான வழிகாட்டி; இந்தியா உணர்ந்து கொள்ளல் அவசியம்

சிறிலங்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும், தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் விசுவாசமான ஊழியரும், அவரது அரசியல் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர் மீண்டும் புதுடில்லிக்கு விஜயம் செய்து தனது வழமையான தமிழின எதிர்ப்பு மற்றும் விடுதலைப் புலிகள் எதிர்ப்புப் பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

தன்மானத்தையும், இனமானத்தையும் அற்பத்தனமான பதவிக் கதிரைக்காக தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, நியாயத்திற்கு முரணான செயற்பாடுகளை, மனச்சாட்சியை உதாசீனம் செய்துவிட்டு, கொத்தடிமைத்தன நிலையை மாபெரும் பேறாகக் கருதிக்கொண்டு, மேற்கொள்ளும் ஈனச்செயல் புரியும் பரம்பரையொன்றின் சமகால வாரிசாக தமிழ்மக்களால் இனங்காணப்பட்டு, செல்லாக்காசாக மதிப்பிடப்பட்டுவரும் கதிர்காமர், கடந்த காலங்களில் என்ன செய்தார் என்பதை தமிழர்கள் எவருக்கும் விளக்க வேண்டிய அவசியமே இல்லை.

அந்த அளவுக்கு தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை, விடுதலைப் போராட்டத்தை, சிங்களப் பேரினவாதத் தலைமைகளின் அபிலாஷைகளுக்கேற்ப, கைநீட்டிப்பெற்ற பதவிப் பிச்சைக்கு நன்றிக்கடனாக, பயங்கரவாதச் செயலாக பிரசாரம் செய்ய நாடுநாடாக அலைந்து, அவர் ஆற்றிய பணிக்கு பௌத்த சிங்களப் பேரினவாதம் ஏற்கனவே நற்சாட்சிப் பத்திரம் வழங்கிக் கௌரவித்ததை நாடறியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஒரு பதவிப்பதரான தமிழரைக்கொண்டே தமிழ்மக்களின் விடுதலைக்கான நியாயமான போராட்டத்தை கொச்சைப்படுத்தி சிதைக்க வேண்டுமென்ற சந்திரிகாவின் நூலோபாயத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விசுவாசமான - சொன்னதைச் செய்யும், சுயசிந்தனையோ இன உணர்வோ அற்ற ஒருவர்தான் கதிர்காமர்.

தமிழ்மக்கள் படும் அவலங்களுக்கும், இடர்களுக்கும், இந்தக் கதிர்காமப் பிரபு செய்த 'கைங்கரியம' கொஞ்ச நஞ்சமல்ல.

கடந்த ஆட்சிக்காலத்தில் அவரது நடவடிக்கைகள் துரோகத்தனத்திற்கு இலக்கணம் வகுப்பவையாகும்.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி ....'
என்ற மகாகவி பாரதி பாடல் வரிகளுக்கு உயிர் கொடுத்து நிதர்சனப்படுத்திய கௌரவமும் இவருக்குரியதேயாகும்.

வெளியுறவு அமைச்சராக இவர் பதவியேற்றிருந்த காலத்தில் சந்திரிகா, தான் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொண்ட யுத்தத்தை - அதாவது அவரது தத்துவத்தின்படி சமாதானத்திற்கான யுத்தத்தை - நியாயப்படுத்தவும், விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று பகிரங்கப் படுத்தவும், கதிர்காமரை ஏவியே பிரசாரங்களை மேற்கொண்டு தனது நோக்கத்தை நிறைவேற்றினார்.

கதிர்காமரின் பிரசாரத்தின் கோயபல்ஸ்தனத்தை புரிந்துகொள்ளாமலோ அல்லது புரிந்துகொண்டும் வேறு சில புற - சுயநல காரணங்களுக்காகவோ விடுதலைப் புலிகளின் நியாயமான - தமது மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதச் செயல் என்று பட்டியலிட்டு, அவர்களைப் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிட்டுத் தத்தம் நாடுகளில் தடைசெய்த சர்வதேச சமூகத்தவர்கள் பலரும் தத்தம் தவறுகளை மௌனமாக ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் உறவுகளை சமாதானத்தின் அடிப்படையில் மேற்கொண்ட பின்னரே கோயபல்ஸ் தனத்தையே மிஞ்சிய கதிர்காமதனத்தை புரிந்துகொண்டிருக்கக்கூடும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்கள் - ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் முற்றிலும் மாறுபட்ட தன்மைகளை உருவாக்கியுள்ளமையானது கதிர்காமரின் 'பொய்முகம்' உணரப்பட்டுவிட்டமைக்கு சான்றாகும்.

இந்த நிலையில் தவறானவர்களின் ஆலோசனைகளை ஏற்றுத் தவறான கணிப்பீடுகளை மேற்கொண்டு இலங்கைப் பிரச்சினையில் தவறான நடவடிக்கைகளை செயற்படுத்தி, வரலாற்றுத் தவறைச் செய்ததும், தொடர்ந்து செய்துவருவதுமான இந்தியாவின் - இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கைகளின் பலவீனத்தை நன்கு புரிந்து கொண்ட சந்திரிகா தொடர்ந்தும் கதிர்காமரைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு நெருக்கடிகளையும், சிக்கல்களையும் ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் அனுகூலங்களைப் பெற முயலும் தந்திரோபாயத்தையே கையாண்டு வருகிறார்.

ஓரிரு மாதங்களின்முன் திருகோணமலையில் இந்திய எண்ணெய்க்குதங்களுக்கு புலிகளால் ஆபத்து என்று கூக்குரலிட்ட கதிர்காமர், இப்போது கடற்புலிகளையும், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபைத் திட்டத்தையும் இந்தியாவுக்கெதிரானதாக - இந்திய நலன்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதாக காட்ட டில்லிக்குக் காவடி எடுத்துள்ளார்.

இந்தியாவைக் கருவியாகப் பாவித்து சமாதானச் சூழலைக் குழப்பும் மற்றொரு உத்தியே இதுவாகும்.

ஜே.ஆர்.காலத்து பட்டறிவை இந்தியா நினைவில் மீட்டுப்பார்க்கவேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் தவறான பேர்வழிகளின் வழிகாட்டலில் செயற்பட்டதாக வரலாறு பதிவுசெய்துகொள்ளக்கூடாது, என்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும்.

## நாடும் நடப்பும்




# பிணையில் செல்ல அனுமதி கிடைத்தும் வெளியேற முடியாதநிலையில் பழ.நெடுமாறன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் உள்ளிட்ட நான்கு பேருக்குப் பிணையில்செல்ல உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், அவர்கள்மீது பிறவழக்குகளும் நிலுவை யில் உள்ளதால், அவற்றிலும் பிணை அனுமதி பெற்றால்தான் அவர் வெளியேசெல்ல முடியும் என்ற சூழல் உருவாகி யுள்ளது.


நேற்றுமுன்தினம் இவர்களை விடுதலை செய்த நீதிவான் சிர்புர்கர் மற்றும் நீதிவான் தணிகாசலம் ஆகியோர் தீர்ப்பின்போது கூறியதாவது -

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தோடு, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தொடர்பு இருப்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. மனுதாரர்களின் மீதுள்ள வழக்குகள் யாவும் அவர்களின் பேச்சுக்களையே அடிப்படையாகக்கொண்டது.

யாரிடம் இருந்தும் ஆயுதங்களோ வெடிமருந்துப் பொருட்களோ கைப்பற்றப்படவில்லை. அவர்களின் வீடுகளிலிருந்து கைப்பற்றப்பட்ட புத்தகங்களும் தடை செய்யப்பட்ட புத்தகங்கள் அல்ல. கைது செய்யப்பட்ட அனைவரும் சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள்.

அவர்களுடைய கடந்த காலமும் பிணை வழங்க மறுக்கும் அளவிற்கு மோசமானதல்ல. அண்மையில் பொடா சட்டத்தில் கைதானவர்களை ஓராண்டு சிறைவாசத்திற்குப்பின் பிணையில் விடுவிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனவே, இவர்களை 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், இரு சரீரப்பிணையிலும் பொடா நீதி மன்றம் விடு தலை செய்ய வேண்டும்.



வழக்கு முடியும்வரை கூட்டங்களில் பேசவோ, பேட்டி தரவோகூடாது. கடவுச்சீட்டு இருந்தால் அதை பொடா நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும். சாட்சிகளைக் கலைக்க முயற்சிக்கக்கூடாது. விடுதலைப் புலிகள் அமைப்புடன் எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது - இவ்வாறு நீதிவான்கள் கூறினர்.

இதேவழக்கில் கைதாகி யுள்ள ஷாகுல் ஹமீது மற்றும் பரந்தாமன் ஆகியோர் சிறைசென்று ஓராண்டு முடியாததால், அவர்களுக்குப் பிணை மறுக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் தங்களது பிணை மனுக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

## குடாநாட்டில் 4 கமக்காரர் வங்கிகள் அடுத்த மாதம் செயற்படவுள்ளன

ஜனவரி மாதம் முதல் யாழ்.மாவட்டத்தில் நான்கு இடங்களில் கமத்தொழில் வங்கிகள் செயற்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கமத்தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நல்லூர், புத்தூர், சாவகச்சேரி, உடுவில் ஆகிய பகுதிகளிலேயே இந்தக் கமக்காரர் வங்கிகள் செயற்படவுள்ளன.

இவற்றைச் செயற்படுத்துவதற்கென நான்கு வங்கிகளுக்கும தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் - 20 இலட்சம் ரூபா கால்நடை விவசாயத்துறை அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தப் பணத்தைக் கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல், விவசாயிகளுக்குக் கடன் வழங்கல் மற்றும் கிருமிநாசினிகள், களைகொல்லிகள் முதலான விவசாயப் பொருட்களும் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டது.(ப)

## உலக வங்கி தூதுக்குழு இலங்கைக்கு வரவுள்ளது

உலக வங்கித் தூதுக்குழு அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக் கெடுபிடிகள் காரணமாக வடக்கு-கிழக்கிலி ருந்து இடம்பெயர்ந்து, மீண்டும் மீளக்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு - வீடுகளைத் திருத்துவதற்காகத் தலா 75 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தபோதும், இன்னமும் அந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. நிதி இன்மையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பொழுது உலக வங்கி சுமார் 75 மில்லியன் டொலரை உதவித்தொகையாக வழங்குவதற்கு முன் வந்திருப்பதாகவும், இதுபற்றி ஆராய்வதற்கு உலக வங்கி தூதுக்குழுவொன்று அடுத்தமாத நடுப்பகுதியில் கொழும்பு வரவிருக்கிறது என்றும், பிரதம அலுவலகத்தின் சிரேஷ்ட ஆலோசகரான எஸ். குணசிங்கம் தெரிவித்தார். இந்த நிதித்தேவையின் அவசியம் குறித்து உலக வங்கியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, அவர்கள் அனுதாபத்தோடு இந்தக் கோரிக்கையை அணுகுவதற்கு முன் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**கல்வியங்காடு விபத்துச் சம்பவத்தையடுத்து**

# பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(கல்வியங்காடு)

இரு பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஐவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காட்டுப்பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தை அடுத்து, அங்கு கலகம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கோப்பாய் பொலிஸாரால் இந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகள் இன்று இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களின் கைது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது - ஐந்து பேருக்கு மேல் கூட்டமாக நிற்கும் எவரையும் சட்ட விரோதச் செயல்களைத் தடுக்கும் முகமாகக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு.

அதற்கு அமைவாக இன்று நடைபெற்ற கலகத்தில் பங்கு பற்றியதோடு, மக்களைக் கலகம் செய்யத் தூண் டினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஐவர் கைது செய்யப் பட்டுள்ளனர் எனத்தெரிவித்தார். (ப)

## வாரநோக்கு

# பலரையும் வாயடைக்கச் செய்துவிட்ட

கடந்த வாரம் உலக அரங்கிலும், குடா நாட்டிலும் அமைதியான முறையிலே சில முக்கிய சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன் கைது செய்யப்பட்ட சம்பவம் எவ்வாறு அமைதியாக நடந்தேறியதோ அதேபோல பல சம்பவங்கள் யாழ்.குடாநாட்டிலும் நடந்துள்ளன. இவற்றுள் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய சம்பவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரால் பளையில் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பு.

இந்தச் சந்திப்பின் போது பல முக்கிய விடயங்களை புலிகள் புலப்படுத்தியிருக்கின்றனர். அதன் மூலமாக உலக அரங்கிற்கு புலிகளின் இன்னொரு முகமும் காட்டப்பட்டிருக்கிறது. புலிகள் வரி அறவிடுகிறார்கள். மக்களைச் சுரண்டுகிறார்கள். அதன் மூலமாக பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாழாக்குகிறார்கள் என்றெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு ஓடியோடி பிரசாரம் செய்த பலர் களைப் படைந்து போகக்கூடிய விதத்திலே பல புதிய நடைமுறைகளை புலிகளின் நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர். சில நடைமுறைகள் அடுத்த வருட முற்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளன.

புலிகளுக்கு மக்களின் வாழ்விலே, பொருளாதாரத்திலே அக்கறையில்லை. அவர்கள் இடைக்கால நிர்வாகத்தை கையேற்பதன் மூலம் மக்களை அடக்கி ஆள நினைக்கிறார்கள் என்றெல்லாம் புலிகளுக்கு எதிராக அறிக்கைப்போர் நடத்தியவர்களுக்கு வாய்ப் பூட்டு பூட்டப்பட்டுள்ளது.

புலிகள் தமது வருடாந்த வருமானத்திலே பத்துக்கோடி ரூபாவை இழக்க நேரிட்ட போதும் மக்களின் நன்மையை முக்கியப்படுத்தி வரிச்சலுகைகளை அளித்திருப்பது சாவதேச சமூகத்திற்கும் நல்லதொரு செய்தி புலப்படுத்தப்பட்டுள்ளது.

உழவுத்துறை, கல்வித்துறை, கடற்றொழில் ஆகிய மூன்று துறைகளையும் சார்ந்த பொருட்களுக்கு முற்றாக வரிவிலக்கப் பட்டுள்ளது. இதன் மூலமாக புலிகள் எவ்வளவு தூரம் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் கல்வி அபிவிருத்தியிலும் கரிசனையாகவுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

எமது தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரக் கட்டுமானத்தின் முதுகெலும்பாக நின்று வாழ்வாதாரத்தைத் தாங்கி நிற்கும் பிரதானமான துறைகள் தான் உழவுத் தொழிலும் கடற்றொழிலும் இந்தத்துறைகளிலே அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஏற்படும் போதுதான் நாடு பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும். அந்த வகையில்

# புலிகளின் வரிச் சலுகை அறிவிப்பு

எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தி நோக்கிய புலிகளின் பார்வையும் நோக்கும் எவ்வாறு இருக்கின்றது. இதுவரை காலமும் எவ்வாறு இருந்து வந்திருக்கிறது என்பது பளை பத்திரிகையாளர் சந்திப்பு மூலமாக சர்வதேச சமூகத்திற்கும் புலிகளை பயங்கரவாதிகள் என பட்டியலிடும் வல்லரசுகளுக்கும் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழும் கடற்றொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் வாழ்விலே அவ்வளவு அக்கறை கொண்டதாக தெரியவில்லை. எமக்கு சொந்தமான கடற்பரப்பிலே இந்திய மீனவர்கள் வந்து மீன்பிடித்துச்செல்ல எமது மீனவர்களோ ஒரு வயிறு சோற்றுக்காக அரசு போடும் நிவாரணத்திற்காக வரிசையிலே காத்து நிற்கவேண்டியுள்ளது. அதற்கும் பழுதடைந்த அரிசியும் மாவும் வழங்கப்படுவது வேறு கதை.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை இலங்கை அரசு மூலமாக கட்டுப்படுத்த முடியாதென நன்கு விளங்கிங்கொண்ட எமது மீனவர்கள் தாமே செயலில் இறங்குகிறார்கள். இரவோடிரவாக இந்திய றோலர்களும் மீனவர்களும் பிடிக்கப்பட்டனர். இவர்கள் வழமை போல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு இலங்கை அரசின் நீதிமன்றங்கள் மூல மாக பின்னர் விடுவிக்கப்பட்டனர். சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைக்கூட லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற தமிழறியா அரசியல்வாதிகள் எவ்வாறு புலிகளுக்கு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய விதத்திலே திசைதிருப்பிவிட முடியுமென தம் மண்டையைக் குடைகிறார்கள். இதனை அண்மையில் கொழும்பில் லக்ஷ்மன் கதிர்காமரின் ஏற்பாட்டில் நடைபெற்ற புலிகளுக்கு எதிரான மாநாடு ஒன்றிலே கதிர்காமர் புலப்படுத்தியிருக்கிறார்.

இந்திய மீனவர்களை கைது செய்வதன் மூலமாக புலிகள் இந்திய அரசுடன் பகைத்துக்கொள்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே நான் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கிறேன். வீணாக இந்திய மீனவர்களை கைது செய்வதன் மூலமாக இந்திய அரசுக்கு புலிகள் மீது ஏற்கனவேயுள்ள பகைமையுணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டாம் என்ற பாணியிலே புலிகளுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார். இவ்வளவு நடந்தும் கதிர்காமர் சரியான வழியில் சிந்திப்பவராக இல்லை.

இந்த விடயத்தை வைத்துப் பார்க்கும் போது இலங்கையின் ஜனாதிபதியும் அவர்களை சார்ந்தோரும் எமது மீனவர்களின் நலன்களில் எவ்வளவு அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது புரிகிறது. இந்த வேளையில் புலிகள் மீனவ சமூகத்திற்கு வரிவிலக்கு அளித்து அவர்களின் ஜீவனோபாயத்தை உரமாக்க முனைவது அவர்களது ஆதாரமாகும்.

விவசாயத்திலும், வெளிநாட்டு இறக்குமதிகள் காரணமாக எமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாதுள்ளது. வெங்காயம் தொடக்கம் அரிசிவரை வெளிநாட்டிலிருந்து வருகிறது. இங்கே எமது விவசாயிகள் வீடுகளிலே தமது உற்பத்திகளை அடுக்கிவிட்டு விற்கமுடியாது. திண்டாடித் தவிக்கிறார்கள். அரசோ இது தொடர்பாக எதுவித அக்கறையும் செலுத்துவதாக தெரியவில்லை.

இவற்றைவிட உதவுதொகைகள், மானியங்கள் என்பவற்றை வழங்கும்போதுகூட தென்னிலங்கை வடபகுதியென பாரபட்சம் காட்டப்படுவது இலகுவில் எவரும் புரிந்து கொள்ளக் கூடிய உண்மை நிலை இந்த நிலையில் புலிகளின் வரி விலக்கானது நேரடியாக ஒரு சில செய்திகளையே சொன்னாலும் அதன் பின்னர் ஆயிரக்கணக்கான செய்திகள் உலகத்தின் கவனத்திற்காக விரவிக் கிடக்கின்றன.

**எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தி நோக்கிய புலிகளின் பார்வையும் நோக்கும் எவ்வாறு இருக்கின்றது. இதுவரை காலமும் எவ்வாறு இருந்து வந்திருக்கிறது என்பது பளை பத்திரிகையாளர் சந்திப்பு மூலமாக சர்வதேச சமூகத்திற்கும் புலிகளை பயங்கரவாதிகள் என பட்டியலிடும் வல்லரசுகளுக்கும் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.**


தமிழ் மாணவர்களின் கல்வித் துறையைகூட தரப்படுத்தல் மூலமாக தடைசெய்து வந்த அரசு இன்றும் அதை கைவிட்டதாக தெரியவில்லை. அண்மையில் வெளியான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளிலும் தமிழ் மாணவர்கள் குறிப்பாக குடாநாட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறைதெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் பேசப்படும் வேளையிலேயே புலிகள் மாணவர்கள், கல்வித்துறை சார்ந்தோரின் நன்மை கருதி பெரும்பாலான பொருட்களுக்கு வரி விலக்களித்துள்ளார்கள். இது வரவேற்கக்கூடிய விடயமாகும்.

இவற்றோடு தீர்வைகள் பல குறைக்கப் பட்டும் சில மக்களின் நன்மை கருதி அதிகரிக்கப்பட்டும் உள்ளன. புலிகளின் வரி அறவீடுகள் தொடர்பாகவும் தப்பான கருத்துக்கள் பல நிலவிய போதும் அதனை சாட்டாக வைத்து சிலர் பிழைத்துக் கொள்வதும் பரவலாக நடக்கிறது. மருந்துப் பொருட்களுக்கு முற்றாக வரி விலக்கு ஆரம்பத்தில் இருந்தே அளிக்கப்பட்டுள்ள போதும் சில வர்த்தகர்கள் மருந்துப் பொருட்களின் விலையை கொழும்பு விலையை விட அதிகளவு கூட்டி விற்பனை செய்து வருகிறார்கள். ஏதுமறியாத அப்பாவி மக்களும் வர்த்தகர்கள் கூறும் புலிகளின் வரி விதிப்பைக் கேட்டதும் மறு பேச்சின்றி வாங்கிச் செல்கிறார்கள். இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

கடந்த வாரம் மற்றுமொரு முக்கியமான சம்பவம் நடந்தேறியுள்ளது. யாழ்மாவட்ட புதிய இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பதவியேற்றுள்ளார். இவர் பதவி யேற்ற மறுநாளே குடாநாட்டின் பலரைச் சந் தித்து கலந்துரையாடியதுடன் பல முக்கிய இடங்களுக்கும் சென்றுள்ளார்.

காலையில் யாழ் செயலகத்தில் அரச அதிபரை சந்தித்த பின்னர் நாகவிகாரைக்கும், நல்லூர் முருகன் ஆலயத்துக்கும் சென்று அங்கு விசேட வழிபாடுகளில் பங்கு கொண்டுள்ளார். ஆலயத்திற்குள் சென்று வழிபட்டுள்ள இராணுவத் தளபதி பொதுமக்கள் சிலருடனும் சிநேகபூர்வமாக உரையாடியுள்ளார். இந்தச் சம்பவம் நல்லதொரு வரவாக இருந்தாலும் தொடர்ந்தும் இருக்கவேண்டு மென்பதே அனைவரது விருப்பமும்.

குடாநாட்டு படையினர் வசமான போது கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வருகைதந்த முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சரும் இந்நாள் கொலைச் சந்தேக நபருமான ரத்வத்தை காலணிகளை சுழற்றி



விட்டு பூரண இராணுவ மரியாதையை துயிலுமில்லத்திலிருந்த மாவீரர் கல்லறைகளுக்கு செலுத்தியதும் அதன் பின்னர் இடித்து பெயர்த்தது போலவும் இனி வரலாறுகள் அமையக்கூடாது.

புதிய இராணுவத்தளபதி மக்களுடன் மட்டுமன்றி புலிகளுடன் நட்புறவை பேண விழைவது நல்லதொரு சகுனமாக எடுத்துக் கொள்வோம் மக்களின் உரிமைகள் மதிக்கப்படின் நாமும் அவர்களை வரவேற்போம்.

இவற்றைவிட இன்னொரு சம்பவம்தான் மிகவும் முக்கிய கவனம் கொடுத்துப் பார்க்க வேண்டியதாகும்.

அதாவது, கடந்த வாரம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் குடாநாட்டிற்கு உத்தியோகபூர்வ மாக விஜயமொன்றை மேற்கொண்டு இங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். ரஷ்யா, பிரிட்டன், இந்தியா, எனும் பட்டியலில் தற்போது அமெரிக்காவும் இணைந்து கொண்டிருக்கிறது.

ஆனால், அமெரிக்காவின் விஜயம் தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை கவனத்திற்குரியது. இன்று யாழ். குடாநாடு ஒட்டு மொத்த தமிழர் தாயக உணர்வுகளை நாடி பிடித்துப் பார்க்கும் களமாக மாறிவருகிறது. ராஜதந்திரிகள், உயரதிகாரிகள் என்ற போர்வையில் பலர் நாளுக்கு நாள் இங்கு வந்து நாடி பிடித்துப் பார்க்கிறார்கள். இந்தப் பின்னணியிலேயே தான் மாவீரர் நாள் நிகழ்வுகளைக்கூட படையினர் குழப்ப முயன்றுள்ளனர். அதாவது தமிழர்கள் குறிப்பாக குடாநாட்டவர் உணர்வாக மாவீரர்தினத்தை அனுஷ்டிக்கிறார்கள். என்பது சர்வதேசத்திற்கு தெரியக்கூடாது என்பதிலே இராணுவ இயந்திரம் குறியாகவிருந்தது உண்மை நிலை.

இங்கு வந்து போகும் சர்வதேச அதிகாரிகள் இங்குள்ள அதிகாரிகளின் கருத்துக்களை கேட்டறிவதிலும் பார்க்க மக்களின் கருத்துக்களை அறிவதிலேயே ஆர்வமாகவுள்ளார்கள்.

இதற்குரிய புறச்சூழல் சரியாக முறையிலே அவர்களுக்கு அமையாது போனாலும் அந்தச் சூழலை உருவாக்க முயற்சிக்கிறார்கள். அத்தகைய சூழலை பயன்படுத்தத்தக்க வகையிலே வேறு பலரை அனுப்பிவைக்கிறார்கள்.

எத்தகையோர் வந்து துளைத்து துளைத்து ஆராய்ந்தாலும் கள நிலைவரங்கள் ஒன்றாகத் தான் இருக்கமுடியும். அதாவது, மக்களது இயல்பு வாழ்வு இன்னும் முழுமையாக ஏற்படாதுள்ளமையும் அகதி வாழ்வும் அவல வாழ்வும் தொடருகின்றமையும் அவ்வாறிருந்தும் மக்கள் சமாதானத்தில் பற்றுறுதியாய் இருப்பதும் தான் புலனாகப்போகிறது.

இவற்றைவிட இன்னும் சில முக்கிய சம்பவங்ளும் கடந்தவாரம் இடம் பெற்றுள்ளன. புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியமர்த்துகை அமைச்சு மூலமாக மேற்கொள்ளப்படவுள்ள நேராட் திட்டம் தொடர்பாக கலந்துரையாடலொன்று யாழ் பஸ்ரியான் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் துறைசார்ந்த வல்லுனர்களிடமிருந்து

ஆலோசனைகளும், திட்டங்களும் பெறப் பட்டன இது அபிவிருத்திப் பணிகளிலே முக்கியபடியாகும்.

ஆனால், அதேவேளை இவ் அமைச்சு யு.என்.எச்.சி.ஆர் நிறுவன நிதியுதவியுடன் மேற்கொண்டு வந்த வீடமைப்பு மற்றும் தொழில் துறை சார்ந்த அபிவிருத்தி திட்டமொன்று இன்னும் முழுமையாக முடிக்கப்படவில்லை இவ் வருடம் இறுதிக்குள் இந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும்பகுதி திரும்பிவிடும் அபாயமுண்டு. இது விடயம் தொடர்பாகவும் அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டியது அவசியமாகும்.

பொதுவான நோக்கில் பார்த்தால் கடந்த

**யாழவன்**

வாரச் சம்பவங்களில் மக்களின் உணர்வுகள் பேசவில்லை. மக்களின் உணர்வுகளுக்காக சிலர் பேசியிருக்கிறார்கள். சிலர் செயலாற்றியிருக்கிறார்கள். மக்களின் உணர்வுகள் எழுச்சிப்படுவதும், அவ் உணர்வுகளை எழுச்சிப்பட வைக்கக் கூடியதாக நடந்து கொள்வதும் எமது தற்போதைய அரசியல் வட்டத்தில் இரு அந்தங்களாக வாரம் தோறும் சுழன்று கொண்டிருக்கின்றன. அடுத்த வாரம் என்ன நடக்குமோ? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# சட்டவிரோத மண்ணகழ்வால் கடலரிப்பு ஏற்படும் அபாயம்!

(அரியாலை)

அரியாலை மணியம் தோட்டம் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மண்ணகழ்ந்து செல்லும் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

நள்ளிரவுவேளையிலும் அதிகாலை வேளையிலும் உழவு இயந்திரங்கள் மூலமாக மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு, அவை அவ்விடத்தை அண்டியுள்ள வீட்டு வளவுகளில் குவிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் அப்பகுதிகளுக்குச் சென்று மண்ணை அகழ்ந்தெடுக்கின்றனர்.

இதனால், மணியம் தோட்டப் பகுதியில் பல இடங்களில் பாரிய குழிகள் காணப்படுவதால் எதிர்காலங்களில் கடல்நீர் கிராமங்களில் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## உலக நோக்கு

### சமாதானம் தொடர்பில் முன்னேற்றம் ஏற்படாவிடின்

# தன்னிச்சையான முடிவுகள் எடுக்கநேரிடும்; இஸ்ரேல் பிரதமர் ஷரோன் எச்சரிக்கை!

சில மாதங்களில் சமாதானம் தொடர்பில் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படாவிடின் - இஸ்ரேல் பலஸ்தீனத்திலிருந்து தன்னை முற்றாகப் பிரித்துக்கொள்வதற்கான ஒரு தலைப்பட்சமான முடிவை எடுக்கநேரிடலாம் என, இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தலைநகர் ரெல் அவிவிலுள்ள கெர்சிலியா என்ற இடத்தில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் உரையாற்றும்போது எச்சரித்துள்ளார்.

நேரடியான பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் பலஸ்தீனர்களுடனான பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு விரும்புவதாகவும், ஆனால் இஸ்ரேலிய மக்களை - பலஸ்தீனர்களின் பணயக்கைதிகளாக வைத்திருக்கப்படுவதை விரும்பவில்லை எனவும் ஷரோன் அங்கு தெரிவித்தார்.

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் அமைந்துள்ள யூதக்குடியேற்றங்கள் அகற்றப்படுமா என்ற விபரங்கள் எதனையும் அவர் அங்கு தெரிவிக்கவில்லை.

இதேவேளை, இந்த மாநாட்டில் பாதுகாப்பு தொடர்பாக பேசவுள்ள விடயங்கள் அடங்கிய அறிக்கை - அமெரிக்க அரசிற்கு ஏற்கனவே இஸ்ரேல் அனுப்பியிருந்தது.

ஆனால், அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட சமாதானத்திற்கான பாதை வரைபிற்கு எதிரான தன்னிச்சையான முடிவுகளை எடுக்கவேண்டாம் என, அமெரிக்கா இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

மேலும், வெள்ளை மாளிகையின் பத்திரிகை தொடர்புகளுக்கான செயலர் ஸ்கொட் மக்மிலன் - இஸ்ரேல் பிரதமர் ஷரோனையும், பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரேயையும் முன் நிபந்தனைகள் இன்றி பேச்சுவார்த்தைக்கு வருமாறு கேட்டிருந்தார்.

பலஸ்தீனப் பிரதமர் கூரே பேச்சு நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றபோதும், பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நிபந்தனைகளில் காணப்படும் வேற்றுமைகளால் பேச்சைத் தொடங்குவதற்கு முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தற்கொலைத் தாக்குதல் முயற்சியிலிருந்து

# ஈராக்கின் அமெரிக்க நிர்வாகி மயிரிழையில் உயிர்தப்பினார்!



ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாக அதிகாரி போல் பிறீமரை இலக்குவைத்து கடந்த 6 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலிலிருந்து அவர் உயிர்தப்பியதாக அமெரிக்கா நேற்றுத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனாலட் ரம்ஸ்பீல்ட் கடந்த 6 ஆம் திகதி ஈராக்கின் நிலை தொடர்பாக அறிந்துகொள்வதற்காகச் சென்றிருந்த அன்றே போல் பிறீமர் சென்ற வாகனத் தொடரணி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்தது.

இதேவேளை, பாக்தாத்திலுள்ள ஷியா முஸ்லிமகளின் அரசியல் காரியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பலுஜாவில் அமெரிக்கப் படையினரின் கவசவாகனம் நிலக் கண்ணிவெடியில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.


# அணுநிலைகளை பார்வையிடுவதற்கு அமெரிக்காவுக்கு ஈரான் அனுமதி!

## ஒப்பந்தமும் கைச்சாத்து

(தெஹ்ரான்)

ஈரானில் அமைந்துள்ள அணு சக்தி அமைப்புக்களைப் பார்வையிடுவதற்கு - அமெரிக்காவிற்கு அனுமதி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஈரான் கைச்சாத்திட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றதென, அமெரிக்கா தொடர்ந்து கூறிவந்தவேளையில்



இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பினர் ஈரானின் அணுசக்தி நிலைகளைத் முற்றாக ஆராய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

சென்ற மாதம் மட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனைகளை சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈரானில் நடத்தியிருந்தது.

எனினும், பரிசோதனையின்போது அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான ஆதாரங்கள் எதனையும் அந்த அமைப்பினால் ஈரானில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் ஈரான் அணுவாயுத நிலைகளை மறைத்துவிட்டதாக அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என்ற ஒப்பந்தத்தில் வியன்னாவில் அமைந்துள்ள சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைமைக்காரியாலயத்தில் 1968 ஆம் ஆண்டு ஈரான் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### காஷ்மீர் தொடர்பான

# ஜனாதிபதி முஷாரப்பின் கருத்துக்கு அமெரிக்கா, ஐ.நா. சபை வரவேற்பு



காஷ்மீர் பிரச்சினைத் தீர்விற்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை என்ற பாகிஸ்தானின் கருத்தினை - ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும் வரவேற்றுள்ளன. பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் கருத்து தமக்கு உற்சாகமூட்டுவதாகவும் அவை தெரிவித்துள்ளன.

காஷ்மீர் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவும், பாகிஸ்தானும் சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை என்ற ஒரே கருத்தை கொண்டிருப்பதால் -

நீண்டகாலமாகத் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் எனத் தான் நம்புவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.


ஆனால், காஷ்மீர் பிரதேசத்தில் வாழும் மக்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியாவும் சரியான முடிவுகளை எடுக்கத்தவறினால், முஷரப்பின் திட்டம் வெற்றியளிக்காதென, போராளிக்குழுத் தலைவர் சயீட் அலி ஷா கிலானி தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தான் தலைவருக்கு இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தன்னிச்சையாக தீர்மானிப்பதற்கு உரிமையில்லையென, ஒரு சாரார் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அடுத்த மாதம் பிராந்திய உச்சி மாநாடொன்றில் பங்குபற்றுவதற்காக, பாகிஸ்தான் செல்வதற்கு திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'பிகல் - 2' விண்கலம் கிறிஸ்மஸ் தினத்தன்று செவ்வாய்க்கிரகத்தை அடையுமென அறிவிப்பு



செவ்வாய்க் கிரகத்தினை நோக்கி பிரயாணத்தை மேற்கொண்டு வந்த 'பிகல் 2' எனப்படும் விண்கலம் செவ்வாய்க் கோளிலிருந்து 3 மில்லியன் தூரத்தில் தனது தாய்க் கலத்திலிருந்து பிரிந்து தனியாக பயணத்தை மேற்கொள்கின்றது.


இந்த விண்கலம் கிறிஸ்மஸ் தினத்தன்று செவ்வாய்க் கிரகத்தை அடையுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் கடந்த காலங்களில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இருக்கின்றதா என்பதைக் ஆராய்வதற்கும், தற்போது அங்கு ஏதாவது உயினங்கள் வாழ்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காகவுமே அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விண்கலத்தை உருவாக்கிய விஞ்ஞானி கருத்துத் தெரிவிக்கையில், கலமானது வெளி உந்துசக்திகள் இன்றி சுயமாக இயங்குவதாகவும், கலத்தின் கட்டுப்பாட்டு நிலையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சமதரையில் கலம் தரையிறங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### பயங்கரவாதிகள் எனக் கைதுசெய்யப்பட்டு

# தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களால் புஷ் நிர்வாகத்திற்கு பெரும் நெருக்கடி!



பயங்கரவாதிகள் என்ற குற்றஞ்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக சட்டப்பிரச்சினை எழுந்துள்ளதாகவும், இவை அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்திற்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் பிரஜை ஒருவரை சொந்த நாட்டில் வைத்து அமெரிக்காவின் எதிரி எனக் குற்றஞ்சாட்டி கைதுசெய்யமுடியாதென, அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. இதனாலேயே அமெரிக்க அரசு பெரும் சிக்கலை எதிர்நோக்குகின்றது.

யோஷ் படிலா எனப்படும் அமெரிக்க பிரஜை - சிக்காக்கோ விமான நிலையத்தில் அணுக்கதிரை வெளியேற்றக்கூடிய சாதனமொன்றை இயக்கமுறப்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைதுசெய்யப்பட்டார்.

இவர் தென் கரோலினாவில் சாலெஸ்ரர் என்ற பகுதியிலுள்ள கடற்படைத்தளத்தில் 2002 யூன் மாதத்திலிருந்து தடுத்துவைக்கப்பட்டிருந்தார். இந்தக் கைது தவறானதென, அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அண்மையில் தீர்ப்பளித்திருந்தது. அத்துடன், இவர் உடன் விடுவிக்கப்படல் வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

மேலும் கியூபாவின் குவன்ரனமோவிலுள்ள இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள லிபியாவைச் சேர்ந்த



கைதியொருவரின் நிலை தொடர்பாக ஆராய்ந்த நீதிமன்றம், அவர் சார்பில் வழக்கறிஞர் ஒருவரை நியமித்து, நீதிமன்றில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தது.

ஆனால், அமெரிக்க அதிபர் புஷ் இங்குள்ள கைதிகளுக்கு போர்க் கைதிகளுக்கான சர்வதேச நடைமுறைகள் பின்பற்றப்படமாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

எனினும், நீதிமன்றத் தீர்ப்பினால் புஷ் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கல்வியங்காட்டில் மினிபஸ் மோதி வீதியால் சென்ற மூவர் படுகாயம்!

## ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் கல்வீச்சு

பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற மினிபஸ் வீதியில் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றை இடித்தபின் மின்கம்பம் ஒன்றுடன் மோதிநின்றது. இந்தச் சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தினால் ஆத்திரமடைந்த மக்கள் இரு மினிபஸ்களை அடித்து நொருக்கினர். இதனையடுத்து பருத்தித்துறை வீதியூடான மினிபஸ்சேவை நேற்று நடைபெறவில்லை.

நேற்றுக்காலை 10 மணிக்கு கல்வியங்காட்டுச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த எஸ்.கோகுலசிறி (வயது-26) குருநகரைச் சேர்ந்த இராசாத்தி (வயது-46), நீர்வேலியைச் சேர்ந்த ச.சிவகௌரி (வயது-19) ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - நேற்றுக்காலை யாழ்.பஸ் நிலையத்திலிருந்து அச்சுவேலி நோக்கியும், பருத்தித்துறை நோக்கியும் புறப்பட்ட இரு தனியார் மினிபஸ்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டபடி வேகமாகச் சென்றன. கல்வியங்காட்டுச் சந்திப்பகுதியில் வைத்து, பின்னால் வந்த அச்சுவேலி நோக்கிச் சென்ற மினிபஸ், அதற்கு முன்னால் பருத்தித்துறை நோக்கிச் சென்ற மினிபஸ்சை முந்திச்செல்ல முயன்றது.

ஆனால், முன்னால் சென்ற மினிபஸ் இடம்தரமறுத்த காரணத்தால், வீதியின் மறுகரையில் வந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை மோதிவிட்டு பாதையோரமாக நின்ற தொலைத்தொடர்புக் கம்பத்துடன் மோதியபடி நின்றது.

இதேவேளை - விபத்துக்குள்ளான மினிபஸ்ஸின் சாரதியும், நடத்துனரும் தலைமறைவாகி விட்டனர். இதனையடுத்து வானில் வந்த பயணிகள் வேறு பஸ் மூலம் பயணத்தைத் தொடர்ந்தனர்

இந்தச் சம்பவத்தையடுத்து விபத்து நடைபெற்ற இடத்தில் கூடிய பொதுமக்கள், மனிபஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன், ரயர்களையும் சேதப்படுத்தினர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கோப்பாய் பொலிஸார் குண்டாந்தடிப்பிரயோகம் செய்து அப்பகுதியில் கூடியிருந்த மக்களை அகற்றினர்.

சம்பவ இடத்தில் கூடியிருந்த பொதுமக்களின் 29 சைக்கிள்களைப் பொலிஸார் தமது உழவு இயந்திரம் மூலம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன், சம்பவத்தோடு தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட ஐந்து பேரை கைது செய்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். காயமடைந்த மூவரையும் மினிபஸ் சங்க உறுப்பினர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரும் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். (ச)

## நாற்சந்தி

'நான் என்ரை பேரனுக்கு பிரபாகரன் என்று பெயர் வைச்சிட்டன்'

'நல்லவேளை நீ எங்கடை மண்ணில் பிறந் ததால் தப்பினாய்... இந்தியாவில்...அதுவும் தமிழ்நாட்டில் பிறந்து இப்படிச்செய்திருந்தால் உன்ரை ஆட்டம் குளோஸ்தான் மணியம்...'

'ஏன் அப்பிடிச்சொல்லுறாய் என்ரைபேரனுக்கு நான் விரும்புற பேரை வைச்சால் என்ர ஆட்டம் ஏன் குளோஸாகப்போது கனகு...?'

'உன்ரை பேரனுக்கு என்ன பேரவைச்சாலும் வை அதிலயொன்றுமில்லை...ஆனா பிரபாகரன் என்று வைக்கக்கூடாது. அப்படி வைச்சா... தமிழ்நாட்டிலை ஜெயலலிதா உன்னைப்பிடிச்சு பொடாவிலை உள்ள தள்ளீடுவா...?'

'என்ன அநியாயம்...?'

'வைகோ, பொடா சட்டத்தின் கீழ்கைதாகி சிறையில் இருப்பது தெரியும் தானே... அவரது வழக்கு விசாரணையில் சாட்சி ஒருவர் வை.கோ.ஒரு பிள்ளைக்கு பிரபாகரன் என்று பெயர் வைத்தார் என்று கூறினாராம்...!'

'அப்படியா...ஒரு பிள்ளைக்கு பிரபாகரன் என்று பேர்வைப்பது கூட குற்றம் என நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமா...?'

'அது என்னமோ தெரியேல்லை ஜெயலலிதா ஆட்சி அதையெல்லாம் குற்றம் என்றுதான் நினைக்குது...'

'அனடைக்கு நானும் ஒரு துனுக்கிலை படிச்சன்...ஒரு சிறிய மாணவன வீட்டில் ஒரு மூலைக்குள் பதுங்கியிருந்து அழுகிறான்... தகப்பன் கேட்கிறார் 'ஏனடா அழுகிறாய்?'

'அப்பா நான் புளி என்று எழுதுறதுக்கு பதிலா பிழையாக 'புலி' என்று எழுதிவிட்டேன்...என்னை முதல்வரிட்டைச்சொல்லி 'பொடா' விலை அடைக்கப்போவதாக வாத்தியார் வெருட்டுறார் என்றான் மாணவன்.'

'ஐயோ...தமிழ்நாடே உனக்கு வந்த சோதனைதான் என்னே...!'

தெருவாசி

## தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைப்பு!

(கிளிநொச்சி)

ஐந்நூறு தொலைபேசி இணைப்புக்கள் வசதிகொண்ட தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் ஒன்று பரந்தனில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே பாவனையில் உள்ள 60 தொலைபேசி இணைப்புக்கள் இந்தப் புதிய தொலைத்தொடர்புத்திட்டத்திற்கு கீழ் கொண்டு வரப்பட உள்ளது.

கிளிநொச்சி அரச செயலகம், அஞ்சல் அலுவலகம், விடுதலைப்புலிகளின் அரசியற்துறை, சமாதான செயலகம் உட்பட பல்வேறு அலுவலகங்களுக்கும் இந்த இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கும், மடு பிரதேசத்துக்கும் தொலைத்தொடர்பு பரிமாற்று நிலையம் அமைக்கப்பட்ட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவன் மீது ஈ.பி.டி.பியினர் தாக்குதல்

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஈ.பி.டி.பி அமைப்பினரால் மாணவன் ஒருவன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

துசீந்திரன் என்ற மாணவரே இவ்வாறு தாக்கப்பட்டவராவர். இச்சம்பவம் நேற்றுமாலை நடந்துள்ளது. துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த இவரை வழிமறித்த ஈ.பி.டி.பியினர் காரணம் எதுவுமின்றி கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அம்மாணவன் ஊர்காவற்றுறைப் பொலிஸிலும், யாழ் - கோவில் வீதியில் அமைந்துள்ள போர் நிறுத்தகண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஹுணுப்பிட்டிய...

காயமுற்ற மூவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து, பொலிஸார் 12 சந்தேக நபர்களை கத்தி, வாள்கள் மற்றும் ஓட்டோக்களுடன் கைதுசெய்துள்ளனர்.

## ஊடுருவ முற்பட்ட...

ஊடாக தங்காலை கடற்படைத்தளத்துக்கு கடற்படையினரின் வாகனத் தொடரணி நேற்றுமுன்தினம் காலை சென்றுகொண்டிருந்தது.

இந்தத் தொடரணி காலை 6.30 மணியளவில் கொழும்புத் துறைமுகத்தின் 3 ஆவது நுழைவாசல் பகுதியில் நிறுத்தப்பட்டபோது, கடற்படையினரின் பஸ் வண்டியில் இரு தமிழர்கள் ஏறமுயன்றனர்.

கடற்படையினரின் தொடரணியில் ஊடுருவ முற்பட்டதாகச் சந்தேகித்து அவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.யோகராஜா, வவுனியாவைச் சேர்ந்த ஆர்.சதீஸ்வரன் ஆகியோரே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்பு பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர். இவர்களை பொலிஸார் தொடர்ந்து விசாரித்துவருவதாக கூறப்படுகிறது.

## சுவிஸ் வெளியுறவு...

அத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்கள் எதுவித நன்மையையும் அடையவில்லை. சொந்த இடங்களில் மீளக்குடியேற வில்லை அவர்களுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வுத்திட்டம் உறுதிமொழி எதுவும் வழங்கப்படவில்லை. படையினரின் உயர்பாதுகாப்பு வலய விரிவாக்கத்தினால் சுமார் ஒரு இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதில் பெரும்பாலானோர் நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். யாழ்.குடா தற்போது இராணுவ வலயங்களாக காட்சி தருகின்றது. இதனால் அங்கு வாழும் மக்கள் பயப்பீதியுடனும் இராணுவ நெருக்குவாரங்களுக்கும் மத்தியில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

அத்துடன் சுவிஸ் அரசாங்கம் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் எனவும் இளம்பரிதி கேட்டுக்கொண்டார்.

அவற்றை ஆர்வமாகக்கேட்ட சுவிஸ் பிரதிநிதி - முஸ்லிம் மக்கள் தொடர்பாகவும் கேட்டார்.

அதற்கு இளம்பரிதி ஒரு தொகுதி முஸ்லிம் மக்கள் தற்போது தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர். மிகுதிப்பேர் தமது சொந்த இடங்களில் குடியமர ஆர்வமாக உள்ளனர். இவ்வாறு மீளக்குடியமரவருபவர்களுக்கு சிறிய உதவிகளை வழங்கிவருகின்றது எனவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் மனிதஉரிமை தொடர்பாகவும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது. இதில் கடற்தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் படையினரின் நடவடிக்கைகளால் மிகவும் நெருக்கடி நிலையை சந்திக்கிறார்கள். அத்துடன் பொலிஸ் நிலையங்களில் சிங்களத்திலேயே கதைப்பதனால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமிழ்மக்களது இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் - தமிழ் பொலிஸ் எவரையும் நியமிக்கவில்லை.

இதேவேளை படையினரால் கைதுசெய்யப்பட்ட பலர் இன்று வரை காணாமல்போயுள்ளனர். இது தொடர்பான பூரண விசாரணை எதுவும் நடைபெறவில்லை. இவ்வாறு காணாமல்போன எவரும் நீதிமன்றின்முன் இதுவரை நிறுத்தப்படவில்லை எனவும் இளம்பரிதி தெரிவித்தார்.

இவற்றைக்கேட்ட சுவிஸ் பிரதிநிதி தமது அரசாங்கம் மனிதாபிமான உதவிகளைப்புரிய ஆயத்தமாக உள்ளதாகவும், விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருப்பது வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

## 16 வயதுச்...

எதிரி இல்லாமலேயே இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கினை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.வரதராசா நேற்று தனது தீர்ப்பை வெளியிட்டார். இந்தத் தீர்ப்பில் -

குறித்த இளைஞர் மீதான குற்றச்சாட்டுக்கள் இரண்டும் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதாகவும், சிறுமியைக்கடத்திய குற்றத்துக்காக ஐந்து வருட கடுழிய சிறைத்தண்டனையும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றத்துக்காக 15 வருட கடுழியச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ள எதிரியை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணையைப் பிறப்பித்த நீதிவான், அது தொடர்பாக நாட்டிலுள்ள துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

மேலும் குற்றவாளி 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் எனவும் நீதிவான் தீர்ப்பளித்தார். (202)

## சமாதானப் பேச்சில்...

குழப்பி - மீண்டும் ஒரு யுத்தத்துக்குள் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மிகவேகமாகவும், தீவிரமாகவும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களில் இணக்கப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழலில்- முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பாக உள்வாங்குவோம். அது ஏற்கனவே நாம் பரிமாறிக் கொண்ட கருத்து.

ஆனால், எமது தலைவருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏற்படுத்திக்கொண்ட அந்த புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாக பல்வேறு அரசியல் தலைவர்களும் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இந்த உடன்பாடு ஏற்கனவே செயலற்றுப்போய்விட்டதாகக்கூட பத்திரிகைச் செய்திகளில் கூறப்பட்டிருந்ததைப் பார்த்தோம்.

முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டதையும் அந்த நேரத்தில் கிழக்கில் ஏற்பட்ட சில சம்பவங்களையும் செல்லாது - முஸ்லிம் காங்கிரசின் தலைவரே இந்த இணக்கப்பாடு செயலற்றுப்போயுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த உடன்பாட்டை முதன்மைப்படுத்தி - அதில் இப்படித்தான் கூறப்பட்டிருக்கின்றது என்று கூறுவதன் தாற்பரியம் எமக்கு விளங்கவில்லை.

முஸ்லிம் மக்களுக்கு அரசியல் அபிலாஷைகள் இருப்பதை நாங்கள் உணர்கின்றோம். அவர்களின் பாதுகாப்பு, உறுதிப்பாடு, எதிர்காலம் என்ற வகையில் முஸ்லிம் மக்களுக்கு உத்தரவாதம் கொடுக்கக் கூடிய நிலையில் தீர்வு ஏற்படுத்துவது பிரச்சினைக்குரிய விடயமல்ல. இந்த விடயத்தை அரசியல் அதிகாரங்களுக்காக - அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பயன்படுத்திக்கொள்வது தான் வேதனையானது என, தமிழ்ச்செல்வன் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கை இனப்பிரச்சினையில்...

அமைச்சர் சந்திரசேகரன் தொடர்ந்து உரையாற்றுகையிலே-

பிரபாகரன் ஒருவரால்தான் தமிழர்களை ஒன்றிணைக்கமுடியும். அத்தகைய வல்லமைமிக்க தலைவராக அவர் இன்று உருவாகியிருக்கிறார். அவருடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆளுமையும், நிர்வாகத்திறனும் சர்வதேச அளவிலேயே மெச்சப்படுகின்றது. அதையிட்டு தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமைப்படுகின்றோம்.

தமிழர்களாகிய நாங்கள் பிரிந்திருந்தது போதும். நாம் அனைவரும் ஒன்றுசேரவேண்டிய காலம் வந்துவிட்டது. வடமராட்சி, தென்மராட்சி, மலையகம், மேல்மாகாணம் என இதுவரை தமிழர்கள் பிரிந்திருந்து நின்றது போதும், இன்று நாம் அனைவரும் தமிழர்கள் என்ற பொதுக் கொள்கையின் பின்னே இணையவேண்டும்.

எங்களைத் தோட்டக்காட்டான், கள்ளத்தோணி என்று குறிப்பிட காலங்கள் மலையேறிவிட்டது. அவற்றை நாம் மறப்போம். இன்று வடக்கிலே உள்ள தமிழர்களாகிய உங்களுக்கு ஓர் பிரச்சனை என்று சொன்னால் உங்களுக்காக குரல் கொடுக்க மலையகத்திலே 15 லடசம் தமிழ்ச் சகோதரர்கள் இருக்கிறார்கள். எனவே நீங்கள் அஞ்சவேண்டியதில்லை.

அதேபோல மலையகத் தமிழர்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் குரல்கொடுக்க நீங்கள் தயாராக வேண்டும். நான் இந்தியாவிற்கு பலதடவைகள் சென்றபோது, தமிழக முதல்வரையும், கலைஞர் கருணாநிதியையும் பலதடவைகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை இந்தியா விடுதலைப்புலிகளை மையமாக வைத்து பார்க்கக்கூடாது. 30 லட்சம் தமிழர்களுடைய பிரச்சனையாகப் பார்க்கவேண்டும். இந்த விடயத்தில் இந்தியா தலையிடாவிட்டால் இந்தியாவை கைவிடவேண்டிய நிலைவரும்.

இதனைக் கூறுவதற்கு இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே எனக்கு உரிமையுண்டு. இன்று இலங்கையிலே தேசிய அரசு உருவாக்கத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இந்தவிடயத்திலே தமிழர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

நாம் சரித்திரத்தை மாற்றியமைப்போம். புதியதொரு வரலாற்றைப் படைப்போம். இன்றுள்ள இனப்பிரச்சினை பிரபாகரன் ஆயுதம் ஏந்தியதால் வந்ததில்லை இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்தே இருந்து வந்திருக்கிறது.

இன்று பலாலியிலிருந்து வரும்போது போரினால் சேதமடைந்த கட்டடங்களையும் வீடுகளையும் பார்த்தோம். அதற்குரிய மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? இலங்கையை ஆளநினைத்தார்களா அல்லது இலங்கை அரசிற்கெதிராக சவால் விட்டார்களா? தமது சுயபாதுகாப்பிற்காகத்தானே தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். எம்மைப் பாதுகாக்க நாம் சிறு முயற்சிகளை எடுத்தோம் இது தப்பா? எனத் தெரிவித்தார். இந்த நிகழ்விலே மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், மாவை சேனாதிராஜா உட்பட பல பிரமுகர்களும் உரையாற்றினர். (ச)

## எழுச்சிப்பேரவை...

அலுவலகப் பெயர்ப்பலகையை கருணாரட்ணம் அடிகளார் திறந்து வைக்க, அலுவலகத்தை தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சயன் நாடாவைவெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சொலமன் சு.சிறில் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அருட்திரு சகாயநாதன் அடிகளார் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவை கொள்கை முன்னெடுப்பாளர் மா.க.ஈழவேந்தன், யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் பாலகிருஸ்ணன், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரச அறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா உட்பட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை நேற்றுமுதல் தனது செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1574 திகதி: 19.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| L | 4 | 9 | 9 | 9 | 4 | 3 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.